Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



இன்றைய நாகரீகம்! நாளைய நாகரீகம்!

மகாராசி சில்க்ஸ்

மங்கல நிகழ்வுகளுக்கு மகாராசியான ஸ்தாபனம்

மகாராசி சில்க்ஸ்

59, நவீனசந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

T.P.No : 0777286247.

(சி/2203)



மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 மாசி 06 ஆம் நாள், ஹிஜ்ரி 1426 துல்ஹஜ் 26 (18.02.2004) புதன்கிழமை இதழ்:140


# தமிழ் கூட்டமைப்புக்கு புலிகள் ஆதரவு;

# வன்னிப் பகுதி மக்களும் வாக்களிப்பர்!

## வேட்பாளர்கள் குறித்து விரைவில் முடிவு; புலிகள்-கூட்டமைப்பு சந்திப்பில் இணக்கம்!

(கிளிநொச்சி)

**தமிழ்மக்களின் அபிலாஷையை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தும் வகையில் - தமிழ்த் தேசிய கூட்டமைப்பு புலிகளின் ஆதரவுடன் தேர்தலில் போட்டியிடுவதெனவும் -**

**இந்தத் தேர்தலில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள மக்களும் வாக்களித்து, தமிழரின் தேசிய பலத்தை வெளிக்காட்டுவர் என்றும் -**

**கிளிநொச்சியில் நடந்த கூட்டமைப்பு - புலிகள் இடையிலான சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டது.**

நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் தற்போதைய அரசியல்நிலை தொடர்பாக ஆராய்வதற்காக - தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களை தமிழ்த் தேசிய கூட்டமைப்புத் தலைவர்கள் நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

நேற்றுக்காலை 11.30 மணிக்கு ஆரம்பமான இந்தச் சந்திப்பு பிற்பகல் 1.30 மணிவரை இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் புலிகள் தரப்பில் தமிழீழ அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், புலனாய்வுத்துறை பொறுப்பாளர் பொட்டுஅம்மான், அரசியற்


(12 ஆம் பக்கம் பார்க்க)


## இந்திய மீனவர்கள் உண்ணாவிரதம்!

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடித்ததாகக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு, யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 67 இந்திய மீனவர்கள் தம்மை விடுதலை செய்யவேண்டுமெனக்கோரி நேற்று முன்தினம் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்த உண்ணாவிரதம் குறித்து, யாழ்ப்பாண மேல்நீதிமன்ற உத்தரவுக்கமைய சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் நேற்று நீதி அமைச்சுக்கு தகவல் தெரிவித்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த மீனவர்கள் தமிழ்நாடு - இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொள்கை ரீதியாக ஒன்றுபட்டிருக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம்!

## அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

தலைவருடன் - தமிழ்மக்களும் - தமிழ் கூட்டமைப்பும் கொள்கை ரீதியாக ஒன்றுபட்டு நிற கிறோம். எந்தக் கருத்து வேறுபாடும் இன்றி இணைந்து செயற்படுவதுடன் கூட்டமைப்புக்கு தேர்தலில் முழு ஆதரவைப் புலிகள் வழங்குவர். எமது கட்டுப்பாட்டுப் பகுதியில் வசிக்கும் மக்களும் இம்முறை தேர்தலில் வாக்களிப்பதுடன், தமிழரின் முழுமையான அபிலாஷைகளை சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்துவோம்.

இவ்வாறு அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர்களை நேற்று கிளிநொச்சியில் சந்தித்தபின்னர் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் பேசியது எமக்கு உற்சாகத்தைத் தருகிறது.

எமது தலைவரதும், தலைமைப்பீடத்தின்


(12 ஆம் பக்கம் பார்க்க)


## வேட்புமனுத் தாக்கலை ஒட்டி யாழ். செயலகத்தில் பாதுகாப்பு!

(யாழ்ப்பாணம்)

பொதுத்தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று ஆரம்பமானதையடுத்து யாழ். செயலகப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

இராணுவத்தினரும், பொலிஸாரும் இந்தப் பகுதியில் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் முட்கம்பி வேலிகள் போடப்பட்டு பரல்களால் வீதிகளில் தடை போடப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்றைய தினம் யாழ். மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு எவரும் வேட்புமனு தாக்கல் செய்யவில்லை என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

### நேற்றைய நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில்

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிர்வாகப் பதவிகள் அறிவிக்கப்பட்டன!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது நிறைவேற்றுக் குழுக் கூட்டம் ஜனாதிபதிமாளிகையில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் முன்னணியின் நிர்வாக உறுப்பினர்களின் பதவி விபரங்கள் வெளியிடப்பட்டன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவியாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், தவிசாளராக ஜே.வி.பியைச் சேர்ந்த நந்தன குணதிலக்கவும், செயலாளராக சுசில் பிரேம் ஜயந்தவும் தெரிவு செய்யப்பட்டனர்.

தேசிய இணை அமைப்பாளர்களாக அனுரா பண்டாரநாயக்காவும் மஹிந்த ராஜபக்ஷவும் உப தலைவர்களாக தேசிய ஐக்கிய முன்ன


(12 ஆம் பக்கம் பார்க்க)


# புதிய அரசாங்கத்தின் கீழ் புலிகளுடன் சமாதானப் பேச்சு!

## மகிந்த ராஜபக்ஷ நோர்வே தொலைக்காட்சிக்கு பேட்டி

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் புதிய அரசாங்கத்தின் கீழ் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகள் புதிய உத்வேகத்துடன் முன்னெடுக்கப்படும் என்று நோர்வே நாட்டின் தேசிய தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

விடுதலைப் புலிகளுடன் மேற்கொள்ளப்பட்டுவந்த சமாதான முயற்சி தற்போது தொய்


(12 ஆம் பக்கம் பார்க்க)


## 4 கட்சிகள், சுயேட்சைக்குழு நேற்று வேட்பு மனுத்தாக்கல்!

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக நேற்று நான்கு அரசியல் கட்சிகளும், சுயேட்சைக் குழுவொன்றும் ஐந்து மாவட்டங்களுக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தன.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் நேற்று ஆரம்பமாகியது. 22 தேர்தல் மாவட்டங்களிலும் வேட்பு மனுக்களை கையேற்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இரத்தினபுரி மாவட்டத்தில் ஐக்கிய சோசலிச கட்சியும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தேசிய அபிவிருத்தி முன்னணியும், மாத்தளை மாவட்டத்தில் லிபரல் கட்சியும தமது வேட்புமனுக்களை நேற்று தாக்கல் செய்தன.


(12 ஆம் பக்கம் பார்க்க)


# பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதானம் உருவாவதையே இந்தியா விரும்புகிறது!

## முன்னாள் அமைச்சர் பெலேரோ யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர்களுக்கு உரிமையோடு சில கடமைகளும் உண்டு என்பதை மறந்துவிடக் கூடாது என, நேற்று யாழ்.வந்த முன்னாள் இந்திய இணைவெளியுறவு அமைச்சரும், காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தருமான எடுவாடோ பெலேரோ தெரிவித்தார்.

யாழ். மாவட்ட அரச அதிபர் எஸ்.பத்மநாதனைச் சந்தித்து உரையாடிய பின்னர் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

தமிழ் மக்களுக்கு என சில உரிமைகள் உண்டு. அதனை அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் தடையின்றிப்பாடுபடுகின்றனர். அதனை நாம் வரவேற்கின்றோம்.

ஜனநாயகத்திற்கு மாறான சக்திகளை அவர்கள் ஒருபோதும் நாட்டின் ஆதிக்க சக்திகளாக ஏற்றுக் கொள்ளக்கூடாது.

நான் யாழ்ப்பாணம் மட்டுமல்ல, கண்டி, நுவரெலியா, கொழும்பு, உட்பட பல பகுதிகளுக்கும் சென்று நாட்டின் தற்போதைய நிலை குறித்து ஆராய்ந்து வருகின்றேன்.


(12 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.பல்கலையில் சிவராத்திரிவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பார்வதி பரமேஸ்வரன் ஆலயத்தில் இன்று சிவராத்திரி விழா நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழக இந்துமா மன்றத்தின் செயற்பாட்டில் இடம்பெறும் முதல் நான்கு சாமத்திலும் விசேட அபிஷேக ஆராதனையும் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

இன்று காலை 6 மணியளவில் இறைவன் வீதியுலாவைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

## ஊனமுற்றோர்களுக்கான சுயமுயற்சிக் கடன் வழங்கல் திட்டம்

ஊனமுற்றோர் அனைவருக்குமான தொழில் முகாமைத்துவமும், தொழில்சார் பயிற்சியும், தொழில் ஆரம்பிப்பதற்கான கடன் உதவியும் வழங்க UNDP நிறுவனத்தின் அனுசரணையுடன் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்கம் (AROD), எண்ணியுள்ளது. இதனடிப்படையில் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேசசெயலர் பிரிவுகளிலும் நிரந்தரமாக வசிக்கும் பாதிப்புற்றவர்கள் இம்மாதம் 19,20,21 ஆம் திகதிகளில் (வியாழன், வெள்ளி, சனி) காலை 10.00 - 2.00 மணி வரை நேரடியாகவந்து தொடர்புகொள்ளவும்.

**வரும் போது உங்கள் பங்கீட்டு அட்டையையும் கொண்டுவரவும்**

**உங்கள் தொடர்புகளுக்கு:-**

ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்கம்,
47/2, ஆடியபாதம் வீதி,
(மருத்துவ பீடம் அருகில்)
திருநெல்வேலி.

(சி-2227)

## றோமன் கத்தோலிக்க பெருமக்களே உங்களுக்கு ஓர் நற்செய்தி

பழைய ஏற்பாடும் சேர்ந்த பைபிள் 285/= சொற்ப பிரதிகள் மட்டுமே கைவசமுள்ளது. உடனே பெற்றுக் கொள்ள,

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
212, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 2225542

(சி/2231)

## பசுக்கள் வெட்டத்தடை

இறைச்சிக்காக பசுமாடுகள் வெட்டுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென பச்சிலைப்பள்ளி பிரதேசசபை அறிவித்துள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்துக்குட்பட்ட இறைச்சிக் கடைகளில் பசுமாடு வெட்டுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபையின்செயலாளர் அறிவித்துள்ளார்.

## சிறு விளம்பரம்

**வீடு, காணி, விற்பனைக்கு**

பழைய பூங்கா வீதியில் மறவ குளத்துக்கு, மேற்கே ஐந்து பரப்புக் காணியோடு சேர்ந்த வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :- எஸ்.மாசில்லாமணி, 22, மூளாய் ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (635)

## விற்பனையாளர் தேவை

**எமது நிறுவனத்துக்கு விற்பனையாளர்கள் தேவை.**

ஆசீர் வணிக நிலையம்,
202 A, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-2234)

## ராஜா யாழ்ப்பாணம்.



இன்று முதல்
விஜயகாந்த், வடிவேலு, பிரபுதேவா, பாண்டியராஜன் நடித்த

**எங்கள் அண்ணா**

10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

சிவராத்திரியை முன்னிட்டு இன்று நள்ளிரவுக்காட்சி - 1.30 மணிக்கு காண்பிக்கப்படும். (சி-2197)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

இன்றுமுதல்
ஜோதிகா, ரம்பா, லைலா, விவேக் நடித்த

**த்ரீ றோசஸ்**

காட்சி நேரம்:11.00, 2.45, 6.00, (பு.நே.)

சிவராத்திரியை முன்னிட்டு சிறப்பு படம்
ரஜனிகாந் நடித்த

**பில்லா** (இரவு 9.00 மணி)

(சி-2196)

**வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில்நுட்ப நிறுவனம்**
யாழ் மாவட்டம்.

## பதவி வெற்றிடம்

யாழ். மாவட்டத்தில் 'யுனிசெப்' அனுசரணையுடன் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் மேற்கொள்ளும் கண்ணிவெடி அபாயக் கல்வித் திட்டத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் கீழ்க்குறிப்பிட்டட பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வெளிக்கள இணைப்பாளர் :- (Field Coordinator)
வெற்றிடம் :- 01 மாதாந்த வேதனம் ரூபா 7000.00
தகைமைகள் :- G.C.E. A/L திறமைச்சித்தி
(பட்டதாரிகளும் விண்ணப்பிக்கலாம்)

கணனி அறிவும், ஆங்கிலத்தில் பேச, எழுத, அறிக்கை தயாரிக்க சரளமான அறிவும், மோட்டார் சைக்கிள் ஓட்டுனர் அனுமதிப்பத்திரம் உள்ளவராகவும் இருத்தல் அவசியம்.

விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை (முழுமையான சுயவிபரம்) 24.02.2004 அன்றோ அல்லது அதற்கு முன்போ கீழ்க்குறிப்பிட்ட முகவரியில் கிடைக்கும் வண்ணம் அனுப்பிவைக்கவும். நேரிலும் சமர்ப்பிக்கலாம்.

தலைவர்
**வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில்நுட்ப நிறுவனம**
இல.63 பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். தொ.பே.இல. 021 - 222 - 5932

(rp/2233)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக 18 படிகளோடு கோவில்கொண்டு எழுந்தருளி அருள் பாலிக்கும் ஸ்ரீ சபரீச ஐயப்பன் தேவஸ்தானத்தில் (கோண்டாவில்) கார்த்திகை முதலாம் நாள் தொடக்கம் தைப் பொங்கல் மகர ஜோதிவரை நடைபெற்ற மண்டல பூசையில் கலந்து கொண்ட ஸ்ரீ ஞானப்பழனி முருகன் தேவஸ்தான ஐயா சிவஸ்ரீ.த.ரவீந்திரராசா ஐயர் அவர்களைப் பாராட்டி "கிருயா அலங்காரமணி" எனும் பட்டம் வழங்கி கௌரவித்த முன்னாள் கௌரவ இந்துகலாச்சார அமைச்சர் மாண்புமிகு திரு.மகேஸ்வரன் அவர்களை பாராட்டி வாழ்த்துகிறோம். அத்துடன் சபரீச ஐயப்பன் தேவஸ்தான ஐயா பிரம்மஸ்ரீ.கி.அரிகரசுதசர்மா அவர்க ளின் பணி சிறக்கவும் பாராட்டுகிறோம்.

**கோண்டாவில் கிழக்கு வாழ் மக்கள்**

(633)

"..... பாதாளத்தின் வாசல்கள் சபையை மேற்கொள்வதில்லை."
(மத்தேயு 16:18b)

"...... கர்த்தர் இதிலே என்றென்றைக்கும் வாசமாயிருப்பார்."
(சங்கீதம் 68:16b)

## கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலய பிரதிஷ்டை ஆராதனையும் 20 வது ஆண்டு நிறைவும்

கொக்குவிலில் புதிதாகக் கட்டப்பட்டு வந்த எமது தலைமை ஆலய பிரதிஷ்டை ஆராதனைக்கு உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதம விருந்தினராக Kensington Temple (U.K).
கிளைசபைப் போதகர் Kossi Latu கலந்துகொள்வார்.

இடம் : 89, பிறவுன் வீதி, கொக்குவில்.
காலம் : 18.02.2004
நேரம் : காலை 10.30 (புதியநேரம்)

**வாருங்கள் சேர்ந்து கர்த்தரை ஆராதிப்போம்**

கல்வாரி குடும்பம்.

சி/2214

# கண்காணிப்பாளர்களின் பாதுகாப்பு; பொலிஸ் மா அதிபருடன் பேச்சு!

(கொழும்பு)

ஐரோப்பிய யூனியனின் பிரதிநிதிகள் பொலிஸ்மா அதிபரைச் சந்தித்து நாடாளுமன்றத் தேர்தல்களைக் கண்காணிக்கவுள்ள தமது பிரதிநிதிகளின் பாதுகாப்பு குறித்து பேச்சுக்களை நடத்தினர்.

ஐரோப்பிய யூனியன் கண்காணிப்பாளர்கள் தேர்தலில் எவ்வாறு பங்களிப்புச் செய்வது என்பது குறித்தும் ஆராயப்பட்ட இந்தச் சந்திப்பின்போது பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா -

ஐரோப்பிய யூனியனின் கண்காணிப்புக் குழுவினருக்கான பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்கமுடியும் என்று உறுதியளித்ததாகத் தெரியவருகிறது.

தேர்தலைக் கண்காணிக்க வரும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் விரைவில் இலங்கைக்கு வருவார்கள் என்றும் அவர்கள் இலங்கையில் உள்ள அனைத்து தேர்தல் வாக்குச் சாவடிகளையும் கண்காணிப்பார்கள் என்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற தேர்தல் வன்முறைகளைப் பற்றியும் இவர்கள் பொலிஸ் மா அதிபரோடு கலந்தாலோசனை செய்தனர்.

அப்போது சர்வதேச நாடுகள் மத்தியில் இலங்கை பாரிய தேர்தல் வன்முறைகள் இடம்பெறக் கூடியதை யிட்டு சர்வதேச நாடுகள் கவலை அடைந்துள்ளதாகவும் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியதாக தெரிவிக்கப்படுகின்றது.

## பாதுகாப்பு நடைமுறையில் புதிய திட்டம் அமுல்!

பொதுத்தேர்தலுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள பொலிஸார் புதிய நடைமுறைகளை கொண்டுவரவுள்ளனர். கடந்த தேர்தல்கள் போலல்லாது இந்தமுறை தேர்தலின்போது, வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் திட்டம் ஒன்றை பொலிஸமா அதிபர் தயாரித்துள்ளார்.

இதன்படி வேட்பாளர்களின் ஆதரவாளர்கள்கூடும் இடங்களில் பொலிஸார் தமது கவனத்தை செலுத்துவர். பிரசாரங்களுக்குச் செல்லும்போது சோதனைச்சாவடிகளில் அவர்களின் வாகனங்கள் சோதனையிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (01)

# சுதந்திர முன்னணி வெற்றி பெற்றால் மாகாணசபைகள் கலைக்கப்படும்

பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி வெற்றிபெற்றவுடன், அனைத்து மாகாண சபைகளும் உடனடியாகக் கலைக்கப்படும். இந்தத் தகவலை மாத்தறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர வெளியிட்டார்.

மாத்தறையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றியபோது அவர் மேலும் தெரிவித்ததாவது-

ஒரே தினத்தில் மாகாணசபைத் தேர்தல்களை நடத்தவேண்டும் என்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. மாகாணசபைத் தேர்தல்களின் பின்னர் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றும் நடத்தப்படவுள்ளது. இந்த சர்வஜன வாக்கெடுப்பு எதிர்வரும் ஜூலை மாதத்தில் நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை இல்லாமற் செய்து, அரசியலமைப்பு அதிகாரங்களுடன் ஜனாதிபதி பிரதம மந்திரியாக நாடாளுமனறத்துக்கு செல்லும் வகையிலேயே, இந்தச் சாவஜன வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார். (01)



பத்திரிகையாளர்களுடனான சந்திப்பில் யாழ்.அரசாங்க அதிபருடன் இந்தியாவின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் எட்வோடோ பெலாரா காணப்படுகின்றார்.

# ஐ.தே.க - முஸ்லிம் காங்கிரஸ் கூட்டுக்கு பரவலாக எதிர்ப்பு!

வவுனியா மாவட்டத்தில் இந்தமுறை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுயுடன் இணைந்து, தேர்தலில் போட்டியிடக்கூடாதென வலியுறுத்தி, மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளரின் வீடடுக்கு முன்னால் நூற்றுக்கணக்கானோர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம்- ஐக்கிய தேசியக் கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் சாந்த குமார புஞ்சிக் ஹேவாவின் இல்லத்திற்கு முன்பாக மேற்கொள்ளப்பட்டது.

கடந்தமுறை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து போட்டியிட்டதால், ஐக்கிய தேசியக் கட்சிக்கு இந்த மாவட்டத்தில் எந்தவொரு இடமும் கிடைக்கவில்லை. முஸ்லிம்கள் சார்பில் நிசாட் பதியுதீன் மற்றும் நூர்தீன் மசூர் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டபோதும், அவர்கள் புத்தளம் மக்களின் நலன்களை கருத்திற்கொண்டே செயற்பட்டனர்.

இதனால், இந்தமுறை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்டால், தாம் வாக்களிக்கப்போவதில்லை என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் இது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒரு கடிதத்தை அனுப்பியுள்ளனர். (03)

# புதிதாக உருவான கூட்டணி தேர்தலில் பெரும் வெற்றி பெறும்

## ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கூறுகிறார்

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கூட்டணி இந்தத் தேர்தலில் மிகப் பெரிய வெற்றியைப் பெறும் என்றும், தான் இந்தத் தேர்தலில் கட்டான தொகுதியில் போட்டியிடப் போவதாகவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே இணைந்து கொள்ளவிருப்பதாக வெளியான செய்திகள் குறித்து கருத்து வெளியிட்ட அவர் -

ஐக்கிய தேசியக்கட்சிக்கு மாற விருப்பதாக வெளியான செய்திகள் வெறும் வதந்தியே. பொதுஜன ஐக்கிய முன்னனியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கட்சிமாறி, ஐக்கிய தேசியக் கட்சிக்கு செல்லவிருப்பதாக வெளியான செய்திகள் யாவும் தவறானவை. ஐக்கிய தேசியக்கட்சியினர் சிலர்தான் புதிய கூட்டணியில் இணைந்து கொள்ளவிருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# 39 அமைச்சர்களை நீக்கியமை ஜனாதிபதியின் நீதியற்ற செயல்!

## ஜனநாயகத்திற்கும் சமாதானத்துக்குமான தேசிய இயக்கம்

அமைச்சரவை அந்தஸ்த்தில்லாத அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பதவி நீக்கம் செய்திருப்பது நீதியற்ற செயல் என்று ஜனநாயகத்துக்கும் சமாதானத்துக்குமான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜனநாயகத்துக்கும் சமாதானத்துக்குமான தேசிய இயக்கம் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்திருக்கிறது. அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

பொது மக்களின் கருத்துக்கு அமைவாக கடமையைச் செய்யவும், சமாதானத்தினை உறுதிசெய்து பாதுகாப்பதற்கேற்றவாறு நடவடிக்கைகளை எடுப்பதும், ஜனாதிபதியின் பொறுப்பாகும்.

இந்தவகையில், சமாதான முயற்சிகள் புத்துயிர் பெறும் என்றும், நிரந்தர சமாதானத்தினை உருவாக்குவதற்கான முயற்சியில் ஈடுபடுவது தொடர்பாக அரசாங்கமும் எதிர்க்கட்சியும் இணக்கப்பாடு ஒன்றுக்கு வருமென்று ஜனநாயகத் துக்கும் சமாதானத்துக்குமான தேசிய இயக்கம் நம்புகிறது என்றும் அந்தக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

# தமிழ் கட்சிகளுடன் கூட்டணி; சிஹல உறுமய எதிர்ப்பு!

(கொழும்பு)

தமிழர் ஐக்கிய முன்னணியின் ஆதரவை நாடுவது, பௌத்த - சிங்கள சமூகத்திற்கு எதிரானது என்றும், எதுவித அரசியல் காரணங்களுக்காகவும் தமிழ் கட்சிகளைதையும் கூட்டுச் சேர்க்கவோ அல்லது அவர்களது ஆசனங்களைப் பகிர்ந்து கொள்ளவோ முக்கிய இரு சிங்களக் கட்சிகளும் எதுவித காரணத்தைக் கொண்டும் முன்வரக்கூடாது என்று, சிஹல உறுமய எழுத்து மூலம் ஜனாதிபதியையும் பிரதமரையும் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்தமுறை தேர்தலில் இரு பிரதான சிங்களக் கட்சிகளுக்கும் நாடாளுமன்றப் பெரும்பான்மைப் பலம் கிடைக்காமற்போகும் வாய்ப்பு உருவாகியுள்ளதால், இதைப் பயன்படுத்தி, தமிழ்க்கட்சிகள் தங்களது ஆதரவை தமிழர் தரப்புப் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வரும் கட்சிக்கு வழங்க முன்வந்தாலும், அத்தகைய ஆதரவை இரு பிரதான கட்சிகளும் நிராகரிக்க வேண்டியது தேசியக் கடமை அப்படி அவர்களது ஆதரவைப் பயன்படுத்துவது பௌத்த - சிங்கள சமூகத்திற்குப் பேராபத்தை உருவாக்கும் என்றும் சிஹல உறுமய மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழ்க் கட்சிகள் விடுதலைப் புலிகளை ஆதரிப்பதனால், தமிழர் கட்சிகளின் ஆதரவைப் பெறுவது, தமிழர்களுக்கு தனிநாடு அமைவதற்கு வாய்ப்பளிப்பதாக மாறிவிடும் என்றும், இதைத் தவிர்க்க இரண்டு பிரதான கட்சிகளும், அனைத்து சிங்கள சிறுகட்சிகளையும் இணைத்துக்கொண்டு, கூட்டாட்சி அமைப்பது அவசியம் என்றும் இனத்துவேச கருத்துக்களை சிஹல உறுமய தொிவித்துள்ளது.

# புதிய கூட்டணியில் மேலும் இரு கட்சிகள்

(கொழும்பு)

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியும் புதிதாக உருவாக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்துகொள்வதற்கான உடன்பாட்டில் கைச்சாத்திடவுள்ளன.

ஜனாதிபதி சந்திரிகாவுடன் இடம்பெற்ற கூட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி புதிய கூட்டணியில் இணைவதற்கான விருப்பத்தை தெரிவித்துள்ளது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜா கொலுரேயும், கட்சியின் பொதுச் செயலாளர் டி.ஈ.டபிள்யூ குணசேகரவும் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றியிருந்தனர்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடிக்கும் ஒரே நோக்கத்திற்காக புதிய கூட்டணிக்கு நிபந்தனைகளுடன் ஆதரவு வழங்க லங்கா சமசமாஜக்கட்சி முடிவு செய்திருக்கிறது.

இந்த இரண்டு கட்சிகளும் அடுத்தவாரம் புதிய கூட்டணியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடவுள்ளதாகத் தெரியவருகிறது.

# ஐ.தே.கவுடன் இணைந்த 23 பேரின் உறுப்புரிமையை பொ.ஐ.மு நிறுத்தியது

## டி.எம்.ஜெயரத்ன தெரிவிப்பு

பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்த 23 உள்ளூராட்சிசபை மற்றும் மாகாண உறுப்பினர்களின் கட்சி அங்கத்துவம் நிறுத்தப்படவுள்ளதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலர் டி.எம்.ஜெயரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களாக இருந்தபோது, இவர்கள் அந்த சபைகளுக்குரிய நிதியைத் தவறான முறையில் பயன் படுத்தியுள்ளனர். அத்துடன், பல்வேறு விதமான ஊழல் மற்றும் லஞ்ச நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர். கட்சி தொடர்பாக அங்கத்துவ இழப்பு தொடர்பான கடிதம் ஏற்கனவே இவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மாத்தளை, மாத்தறை, குருநாகல், கம்பஹா மற்றும் கண்டி போன்ற இடங்களிலிருந்தே இவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தனர். எனவே, இவர்களது கட்சி அங்கத்துவ நிறுத்தத்துடன் இவர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டோர் படிப் படியாக நாடு திரும்புகின்றனர்!

(கொழும்பு)

ஐரோப்பிய நாடுகளில் அரசியல் தஞ்சம்கோரி விண்ணப்பித்து, நிராகரிக்கப்பட்டவர்களை படிப்படியாக அந்த நாடுகள் திருப்பி அனுப்ப ஆரம்பித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதுவரை 550 பேர்வரை இவ்வாறு திருப்பி அனுபப்பட்டுள்ளதாகவும், மேலும் பலர் இவ்வாறு திருப்பி அனுப்பப்படலாம் எனவும் மனித உரிமைகள் அமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட பின்னர், இலங்கையில் தமிழர்களுக்கு பாதுகாப்பு உள்ளது என்ற அடிப்படையிலேயே, இவர்களைத் திருப்பி அனுப்புவதற்கு அந்த நாடுகள் தீர்மானித்திருப்பதாகவும், மனித உரிமைகள் அமைப்பொன்று தெரிவித்துள்ளது.

மேற்குலக நாடுகளிலிருந்து இவ்வாறு திருப்பி அனுப்பப்படுவோரின் நலன்களைக் கவனிக்கவென, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இயங்கிவரும் புலம் பெயர்ந்தோருக்கான சர்வதேச நிலையம் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் அலுவலகங்களைத் திறந்துள்ளது.

இவ்வாறு இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுபவர்களை, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட அதிகாரிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பொறுப்பேற்று, அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பும் பணிகளில் உதவிவருகின்றனர்.

அத்தோடு, இவர்கள் சுயதொழில்களை ஆரம்பிப்பதற்கும், ஐக்கிய நாடுகள் அபிவிருத்திதிட்ட அதிகாரிகள் உதவிவருகின்றனர்.

# மேற்கிந்தியத் தீவுகள் அணியை நெருக்கடிக்குள் தள்ளிய அயர்லாந்து!


இந்திய வீரர் உதப்பா துடுப்பெடுத்தாடுகிறார்.

ICC U/19 CRICKET WORLD CUP BANGLADESH 2004

பங்களாதேஷில் நடைபெற்றுவரும் 19 வயதுக் குட்பட்டோருக்கான உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் - நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் அவுஸ்ரேலியா, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத்தீவு அணிகள் வெற்றிபெற்றன.

19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கிண்ணப் போட்டிகள் நான்கு பிரிவுகளாக - தினமும் நான்கு போட்டிகள் நடைபெற்றுவருகின்றன.

இந்தப் போட்டிகளில் அவுஸ்ரேலியா - கனடா அணிகளுக்கு இடையிலான போட்டி, ராஜ்ஷாயில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கனடா அணி, 45.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றது. கனடா அணியில் இடம்பெற்றிருந்த அன்ஜாரியா 50 ஓட்டங்களையும், ஜி.பஸ்தியாம்பிள்ளை 37 ஓட்டங்களையும் பெற்றனர்.

தொடர்ந்து ஆட்டத்தை ஆரம்பித்த அவுஸ்ரேலிய அணி 28.4 ஓவர்களிலேயே - 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 165 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

டொறோபொலொஸ் 55 பந்துகளில் - 11 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 57 ஓட்டங்களையும், ஷேவெஸ் 37 ஓட்டங்களையும் பெற்றனர்.

சிட்டகொங்கில் நடைபெற்ற இன்னொரு ஆட்டத்தில் உகண்டா மற்றும் தென்னாபிரிக்கா அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற உகண்டா அணி முதலில் துடுப்பெடுத்தாடி, 48.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது.

தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சாளர் செப்ரெம்பர் - 10 ஓவர்கள் பந்துவீசி 14 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 4 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

அடுத்து விளையாடிய தென்னாபிரிக்க அணி, 28 ஓவர்களிலேயே இரண்டு விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 126 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

கிளின்ற் போயர் 43 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அன்ரூ பிரோன் 56 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றார். இந்தப் போட்டியில் தென்னாபிரிக்க அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இதேவேளை, குல்னாவில் நடைபெற்ற இன்னொரு போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை எதிர்த்து அயர்லாந்து அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 265 ஓட்டங்களைப் பெற்றது.

சேவியர் மார்ஷல் 15 பவுண்டரிகள் ஒரு சிக்ஸருடன் 83 ஓட்டங்களையும், திசான் மராக் 38 ஓட்டங்களையும், ஜொனதன் அகுஸ்தான் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அயர்லாந்து வீரர் அன்ரூ றிடில்ஸ் 3 விக்கெட்டுக்களையும், கிரேக் தொம்சன் 5 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆட்டத்தை ஆரம்பித்த அயர்லாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 259 ஓட்டங்களை மட்டுமே பெற்றதால் 6 ஓட்டங்களால் தோல்விகண்டது.

கரி வில்சன் 64 ஓட்டங்களையும், கெவின் ஓபிறெய்ன் 95 பந்துகளில் 13 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 95 ஓட்டங்களையும் பெற்றனர்.

நான்காவது போட்டியில் இந்திய அணி 270 ஓட்டங்களில் ஸ்கொட்லாந்து அணியைத் தோற்கடித்தது தெரிந்ததே.

# நியூஸிலாந்திடம் 5 விக்கெட்டுகளால் தோல்வி கண்டது தென்னாபிரிக்கா!

(கிறிஸ்சேர்ச்)



நியூஸிலாந்தில் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருக்கும் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி, நேற்று நடைபெற்ற ஒருநாள் ஆட்டமொன்றில் 5 விக்கெட்டுக்களால் தோல்விகண்டது.

கிறிஸ்ட்சேர்ச்சில் நடைபெற்ற நேற்றைய போட்டியில் - தென்னாபிரிக்கா நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று துடுப்பாட்டத்தை ஆரம்பித்தது.

50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட் இழப்புக்கு 253 ஓட்டங்களை தென்னாபிரிக்க அணி பெற்றது. சிமித் 80 ஓட்டங்களையும், டிப்பென்னர் 36, ருடொல்ப் 42, பௌச்சர் 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 45.1 ஓவர்களிலேயே 5 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 255 ஓட்டங்களைப் பெற்று 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

அணித்தலைவர் பிளெமிங் 108 ஓட்டங்களையும், மக்மிலன் ஆட்டமிழக்காமல் 71 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தென்னாபிரிக்க வீரர் என்ரினி 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

## வடமராட்சி பாடசாலை மட்ட

# கிரிக்கெட் சுற்றுப்போட்டி நாளை நடைபெறும்!

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்டுவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அரையிறுதி ஆட்டம் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த 16 ஆம் திகதி நடைபெற்றது.

10 ஓவர்கள் கொண்ட இந்த அரையிறுதி ஆட்டத்தில்- ஹாட்லிக் கல்லூரியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மோதியது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 37 ஓட்டங்களைப் பெற்றது. அடுத்து துடுப்பெடுத்தாடிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 34 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இறுதியாட்டம் நாளை திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் ஹாட்லிக் கல்லூரியும், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும் மோதவுள்ளன. (12)

# விளையாட்டு

# கரவெட்டி கோட்ட மட்ட வலைப்பந்தாட்டப் போட்டிகள்

கரவெட்டி கோட்டமட்ட வலைப் பந்தாட்டப் போட்டியில் நாளை காலை 8 மணிக்கு, 15 வயது 'பி' பிரிவில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியை எதிர்த்து பொன்னம்பலம் வித்தியாலயமும், ஞானாசாரியார் கல்லூரியை எதிர்த்து வல்வெட்டி இ.த.க பாடசாலையும்,

17 வயது 'ஏ' பிரிவில் விக்னேஸ்வரா கல்லூரியை எதிர்த்து கரணவாய் மகா வித்தியாலயமும், ஞானசாரியார் கல்லூரியை எதிர்த்து பொன்னம்பல வித்தியாலயமும் -

பி.ப 2 மணிக்கு 15 வயது 'பி' பிரிவில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியை எதிர்த்து இமையாணன் அ.த.க பாடசாலையும், பொன்னம்பலம் வித்தியாலயத்தை எதிர்த்து வல்வெட்டி இ.த.க பாடசாலையும்,

17 வயது 'ஏ' பிரிவில் பொன்னம்பல வித்தியாலத்தை எதிர்த்து வல்வெட்டி இ.த.க பாடசாலையும் 17 வயது 'பி' பிரிவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியை எதிர்த்து தேவரையாளி இந்துக் கல்லூரியும், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியை எதிர்த்து இமையாணன் அ.த.க பாடசாலையும், 17 வயது 'ஏ' பிரிவில் ஞானாசாரியார் கல்லூரியை எதிர்த்து வல்வெட்டி இ.த.க பாடசாலையும் மோதவுள்ளன.

நாளைமறுநாள் மாலை 2 மணிக்கு 17 வயது 'பி' பிரிவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியை எதிர்த்து இமையாணன் அ.த.க பாடசாலையும், 17 வயது 'பி' பிரிவில கம்பர்மலை அ.த.க பாடசாலையை எதிர்த்து தேவரையாளி இந்துக் கல்லூரியும் மோதவுள்ளன. (12)

## பாடசாலை மட்ட வலைப்பந்தாட்டம்

# தேவரையாளி இந்து அணி மாவட்டப் போட்டிக்கு தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்டுவரும் 17 வயதிற்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் - மாவட்டப் போட்டிக்கு வடமராட்சி வலயத்திலிருந்து சிறந்த அணியைத் தெரிவுசெய்வதற்கான போட்டி கடந்த 15 ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதன் இறுதி ஆட்டத்தில், தேவரையாளி இந்துக் கல்லூரியை எதிர்த்து கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை மோதியது.


திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் - தேவரையாளி இந்துக் கல்லூரி, கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலையை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

ஆட்டம் தொடங்கி 8 ஆவது நிமிடத்தில் தேவரையாளி இந்துக் கல்லூரி மாணவன் ச.பிரகாஷ் அடித்த கோலினால், இந்த அணி மாவட்ட போட்டிக்குத் தெரிவாகியது.

இந்த ஆட்டத்திற்கு மத்தியஸ்தராக எஸ்.கருணாகரனும், உதவி மத்தியஸ்தர்களாக ரி.வரதராஜன், ரி.விமலன் ஆகியோரும் கடமையாற்றினர்.(12)

# வைகோ - ராமதாஸ் சென்னையில் சந்திப்பு

(சென்னை)



ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோவை பா.ம.க. நிறுவனர் டொக்டர் ராமதாஸ் நேரில் சந்தித்துப் பேசினார்.

பொடா வழக்கில் சிறையிலிருந்து பிணையில் வெளியே வந்த பின் வைகோவை ராமதாஸ் சந்திப்பது இதுவே முதல் முறையாகும்.

முன்னாள் மத்திய அமைச்சர் மூர்த்தியுடன் வைகோவின் அண்ணாநகர் வீட்டிற்குச் சென்ற ராமதாஸ் - அவருக்கு சால்வை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார். பின்னர் இருவரும் தனியே பேசிக்கொண்டிருந்தனர்.

சந்திப்புக்குபின் நிருபர்களிடம் பேசிய ராமதாஸ்- தமிழ், 'தமிழ் உணர்வு என்று பேசினாலே ஏதோ பெரிய தவறு செய்துவிட்டது போல வழக்குகள் போடுகிறார்கள், இது நல்லதல்லதென்றார்.

# மேனகாகாந்தி மகனுடன் பா.ஜ.க.வில் இணைந்தார்

(புதுடெல்கி)

மேனகாகாந்தியும், அவரது மகன் வருண் காந்தியும் நேற்றுமுன்தினம் பிரதமர் வாஜ்பாயை சந்தித்து பாரதீய ஜனதா கட்சியில் சேர்ந்தனர்.

முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் இளைய மகன் சஞ்சய்காந்தியின் மனைவி மேனகா காந்தி. கடந்த சில ஆண்டுகளுக்கு முன் நடந்த விமான விபத்தில் சஞ்சய்காந்தி மரணமடைந்தார். அதன் பிறகு, இந்திரா காந்தியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டைத் தொடர்ந்து, மேனகா தனது மகன் வருண் காந்தியுடன் தனியாகப் பிரிந்து சென்றுவிட்டார்.

பின்னர் தனியாக கட்சி ஒன்றை தொடங்கி நடத்தினார். சில காலம் மத்திய அமைச்சராக இருந்தார்.

விரைவில் நாடாளுமன்றத்துக்கு தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில், மேனகாவும், வருண்காந்தியும் நேற்றுமுன்தினம் பாரதீய ஜனதாவில் சேர்ந்தனர்.

தாய், மகன் இருவரும் நேற்றுமுன்தினம் காலை டெல்கி ரேஸ்கோர்ஸ் சாலையில் உள்ள பிரமர் வாஜ்பாயின் இல்லத்துக்குச் சென்று அவரை சந்தித்து தாங்கள் பாரதீய ஜனதாவில் இணைய விரும்புவதாக தெரிவித்தனர். அதற்கு வாஜ்பாய் சம்மதம் தெரிவித்தார்.

பின்னர் வருண்காந்தியும், மேனகாவும் பாரதீய ஜனதா தலைவர் வெங்கையா நாயுடு, பொதுச்செயலாளர் பிரமோத் மகாஜன் ஆகியோர் முன்னிலையில் பாரதீய ஜனதா கட்சியில் சேர்ந்தனர். இதன்பின் வருண் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது-



எனது சித்தியும், காங்கிரஸ் தலைவருமான சோனியா காந்தியை இந்தியாவின் பிரதமராக ஏற்றுக்கொள்ள முடியாது என்றாலும் - தேர்தலில் அவரை எதிர்த்தோ அல்லது ராகுல், பிரியங்காவை எதிர்த்தோ நான் பிரசாரம் செய்யமாட்டேன்.

நான் அவர்கள் மீது மிகுந்த மரியாதை வைத்திருக்கின்றேன். நாங்கள் இரத்த சொந்தங்கள். எனவே, அவர்களை விமர்சிக்க மாட்டேன்.

சோனியா வெளிநாட்டுக்காரர் என்பது ஒரு பிரச்சினையாகவுள்ளது. ஆனால், அதுவே முக்கிய பிரச்சினையல்ல. வேறு பல பிரச்சினைகளும் உள்ளன. வளரும் நாடான இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக உருவாக்கவேண்டும் இவ்வாறு வருண் கூறினார்.

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தர)ப் பரீட்சை

## வணிகக்கல்வி

### (முகாமைத்துவ விதகள்)

(சென்றவாரத் தொடர்ச்சி...)

24. ஒரு மேற்பார்வையாளர் மேலதிக அதிகாரத்தைபெற உதவும் அம்சம் எது?
1. சூழல் ஆய்வு 2. நிர்வாகக்கட்டமைப்பு 3. விசால அளவு
4. வலு 5. நியமமாக்கல்

25. ஒழுங்கமைத்தல் கருமங்களில் ஒன்றாக அமையக்கூடியது
1. சூழல் ஆய்வு 2. நிர்வாகக்கட்டமைப்பு 3. விசால அளவு
4. வலு 5. நியமமாக்கல்

26. உத்தியோகத்தர்களின் அதிகாரங்கள் பொறுப்புக்களை விபரிப்பது
1. சூழல் ஆய்வு 2. நிர்வாகக்கட்டமைப்பு 3. விசால அளவு
4. வலு 5. நியமமாக்கல்

27. திட்டமிடுதல் பணியில் அதிகம் ஈடுபடுபவர்
1. பங்குதாரர் 2. உயர்முகாமையாளர்
3. ஒரு முகாமையாளர் 4. கீழ் முகாமையாளர் 5. அரசு

28. ஒழுங்கத்தல் பணியில் அதிகம் ஈடுபடுபவர்
1. பங்குதாரர் 2. உயர்முகாமையாளர்
3. ஒரு முகாமையாளர் 4. கீழ் முகாமையாளர் 5. அரசு

29. தலைமை வகித்தல் பணியில் அதிகம் ஈடுபடுபவர்
1. பங்குதாரர் 2. உயர்முகாமையாளர்
3. ஒரு முகாமையாளர் 4. கீழ் முகாமையாளர் 5. அரசு

30. நிறுவனத்தின் முயற்சியாளராக காணப்படுபவர்
1. பங்குதாரர் 2. உயர்முகாமையாளர்
3. ஒரு முகாமையாளர் 4. கீழ் முகாமையாளர் 5. அரசு

31. நிறுவனத்தின் முயற்சியின்மீது ஆதிக்கத்தை செலுத்தும் ஒரு சக்தி
1. பங்குதாரர் 2. உயர்முகாமையாளர்
3. ஒரு முகாமையாளர் 4. கீழ் முகாமையாளர் 5. அரசு

32. வணிக அமைப்பு ஒன்றின் நம்பிக்கையையும் வலிமையையும் எடுத்துக்காட்டுவது
1. பெயர் 2. கலாசாரம் 3. எல்லை 4. பதிவுமுறை
5. இயைபாக்கல்

33. அமைப்பின் செயற்பாடு வரையறையை நிச்சயிப்பது
1. பெயர் 2. கலாசாரம் 3. எல்லை 4. பதிவுமுறை
5. இயைபாக்கல்

34. முரண்பாடுகளை நிறுவனத்துள் நீக்க உதவுவது
1. பெயர் 2. கலாசாரம் 3. எல்லை 4. பதிவுமுறை
5. இயைபாக்கல்

35. நிறுவன செயற்பாடுகளை விமர்சித்தல் உறுதிசெய்தல் கட்டுப்படுத்தல் போன்றவற்றுக்கு உதவுவது
1. பெயர் 2. கலாசாரம் 3. எல்லை 4. பதிவுமுறை
5. இயைபாக்கல்

36. 'மற்றவர்களை வேலை செய்விக்கும் கலைமுகாமை' என வரைவிலக்கணப்படுத்தியது
1. Mary Parker Follet 2. Robert Kritner
3. James A.stoner 4. Breech 5. Peret Drucker.

37. நிறுவன இலக்கை அடைவதற்கு உதவும் கருமமே முகாமை எனக் கூறியவர்
1. Mary Parker Follet 2. Robert Kritner
3. James A.stoner 4. Breech 5. Peret Drucker.

38. நிறுவனத்தின் நோக்கத்தை அடைவதற்கு அதன் மானிட வளங்களையும் ஏனைய வளங்களையும் திட்டமிடுதல் ஒழுங்கமைத்தல் வழிநடத்தல் கட்டுப்படுத்தல் ஆகிய கருமங்களை அடங்கிய செயற்பாடு
1. Mary Parker Follet 2. Robert Kritner
3. James A.stoner 4. Breech 5. Peret Drucker.

39. வணிகத் தொழிற்பாடாக கருதப்பட முடியாதது எது?
1. ஆளணி 2. உற்பத்தி 3. கொள்வனவு
4. குறிக்கோள் 5. நிர்வாகம்

40. பின்வருவனவற்றில் ஆளணி முகாமைத் தொழிற்பாடு அல்லாதது.
1. மனிதசக்தி திட்டமிடுதல் 2. ஊழியர்களைக் கவருதல்
3. பயிற்சியளித்தல் 4. ஊக்கப்படுத்தல்
5. திணைக்களப்படுத்தல்

41. மனிதவளத்தை விருத்திசெய்ய உதவும் பிரதானமுறை
1. மனிதசக்தி திட்டமிடுதல் 2. ஊழியர்களைக் கவருதல்
3. பயிற்சியளித்தல் 4. ஊக்கப்படுத்தல்
5. திணைக்களப்படுத்தல்

42. வேலை தொடர்பான பல்வேறுவகை செயற்பாடுகளை அதிகரிக்கும் ஊக்குவிப்பு முறை
1. வேலை சிறப்பாக்கல் 2. வேலை விரிவாக்கல்
3. வேலைச்சுழற்சி 4. தொகுதிவேலை 5. வேலைச்சலிப்பு

43. வேலை தொடர்பான பொறுப்புக்களையும் அங்கீகாரத்தையும் சாதனைகள் புரிவதற்கான வாய்ப்பினையும் அதிகரிக்கும் பொருட்டு செயற்பாடுகளை அதிகரிக்க செய்யும்முறை
1. வேலை சிறப்பாக்கல் 2. வேலை விரிவாக்கல்
3. வேலைச்சுழற்சி 4. தொகுதிவேலை 5. வேலைச்சலிப்பு

44. வேலை தொடர்பான சலிப்புத்தன்மையை நீக்க உதவும்முறை எது?
1. வேலை சிறப்பாக்கல் 2. வேலை விரிவாக்கல்
3. வேலைச்சுழற்சி 4. தொகுதிவேலை 5. வேலைச்சலிப்பு

45. பயனுறுதி மிக்க கட்டுப்பாட்டுமுறையில் இருக்கவேண்டிய மிகச் சரியான அம்சம்
1. சரியான தகவல் 2. சரியான நேரம் 3. இலகுத்தன்மை
4. சிக்கனத்தன்மை 5. மேற்கூறிய எல்லாம்.

46. விசால அளவைத் தீர்மானிக்கும் காரணி அல்லாதது
1. மேற்பார்வையாளரின் திறன் 2. பயன்படும் தொழில்நுட்பம்
3. வேலையின் தன்மை
4. பணியாளருடன் செலவுசெய்ய வேண்டிய நேரம்
5. அரசகொள்கை

47. அமைப்பு வரைபடம் மூலம் அறிய முடியாதது
1. நிறுவனப் பகுதிகள் 2. பிரிவுகள்
3. முரண்பாடு 4. இயைபாக்கம் 5. பதவிகள்

48. கையளிப்பின் அளவைத் தீர்மானிக்கும் காரணி அல்லாதது
1. நிறுவனத்தின் அளவு 2. கட்டுப்பாட்டின் அளவு
3. தீர்மானத்தின் முக்கியத்துவம் 4. முகாமைக்கொள்கை
5. அரசகொள்கை

49. கட்டுப்பாட்டு நுட்பமல்லாதது ?
1. வீதிதப்படுப்பாய்வு 2. தரக்கட்டுப்பாடு
3. வலைப்பின்னல் ஆய்வு 4. நியமமாக்கல்
5. சமப்பாட்டுப்புள்ளி

50. முகாமையாளரின் எந்த தொழிற்பாடு அவரை தீர்மானப் பங்காளர் என முடிவாக்க உதவியுள்ளது.
1. பயிற்சியளித்தல் 2. தகவலளித்தல் 3. இணைப்பாளர்
4. முயற்சியாளர் 5. உத்தியோகப் பேச்சாளர்.

பி.எஸ்.பசில்
**ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி**


— இங்கே மடிக்கவும் —



## மாணவர் மலர்

### மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2004

01. ஒவ்வொரு உருவிலும் காணப்படும் பழங்களின் பெயரை அடைப்புக்குள் உள்ள பெயர்களில் இருந்து தெரிவுசெய்து எழுதுக.



வாழைப்பழம், மாதுளம்பழம், விளாம்பழம், றம்புட்டான் பழம், அன்னாசி, முந்திரிகை, பலாப்பழம், அப்பிள்பழம், தோடம்பழம்.


02. பின்வரும் ஒவ்வொரு சிங்களச் சொல்லினதும் கருத்தை தமிழில் எழுதுக.
1. ..........................
2. ..........................
3. ..........................
4. ..........................

03. பின்வரும் உபகரணங்கள் எக்கைத்தொழில்களில் பயன்படுத்தப்படுகின்றன?
1. மண்வெட்டி ......................
2. சீவுளி ..........................
3. சாந்தகப்பை ....................
4. துருத்தி .........................

04. பின்வரும் பாடலில் உள்ள வெற்றிடங்களில் பொருத்தமான சொல்லை வைத்து எழுதுக.
கண்ணே எழுந்திடுவாய் ...................... கண்மலர்வாய்
சின்னஞ் ..................... மலரே.....................
நீங்கி நீ ...........................................கரையுது
பார் காலையும் ஆனது ..............................கூவுது
பார் சின்னக் ..................... பாடுது பார்.

05. மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை வெற்றிடத்தில் எழுதுக.
1. ஐம்பதாவது ஆண்டு இறுதியில் கொண்டாடப்படும் விழா
அ) வெள்ளிவிழா ஆ) பொன்விழா இ) வைரவிழா ஈ) அமுதவிழா
2. கூவி அழைப்பான். கூடி உண்ணுவான் அவன் யார்?
அ) கிளி ஆ) புறா இ) மைனா ஈ) காகம்
3. அகத்தின் ..................... முகத்தில் தெரியும்.
இடைவெளிக்குப் பொருத்தமான சொல்
அ) அழகு ஆ) அளகு இ) அலகு ஈ) கருத்து
4. நான்காவது சதுர எண் எது?
அ) 4 ஆ) 8 இ) 12 ஈ) 16
5. சட்டி பானை வனைபவன்?
அ) தட்டான் ஆ) குயவன் இ) வண்ணான் ஈ) மேசன்.

06. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
1. 3,249 = ...................... +200+40+9 வெற்றிடத்தில் வரும் எண்ணை எழுதுக.
2.




இவ்வெண் சட்டம் காட்டும் எண் யாது?

3. மூவாயிரத்து ஐந்நூற்று நாற்பத்தொன்பது ன்பதை இலக்கத்தில் எழுதுக.
......................
4. ...................... 3000 ......................
முந்திய எண்ணையும், பிந்திய எண்ணையும் எழுதுக.

| 5. கூட்டுக. | 6. கழிக்குக. | 7. பெருக்குக. | 8. பிரிக்குக. |
|---|---|---|---|
| 4527<br>+ 603<br>16 | 8003<br>- 4175 | 403<br>x 5 | 4⟌836 |

9. எண்கோலத்தில் வரும் வெற்றிடங்ளை நிரப்புக.
185,180,175,......,165,160.........

10. பெருக்கல் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| x | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| 1 | ... | 2 | ... | 4 | ... |
| 2 | ... | 4 | ... | 8 | ... |
| 3 | 3 | ... | ... | 12 | ... |
| 4 | ... | 8 | ... | ... | 10 |
| 5 | 5 | ... | 15 | ... | ... |

07. 817 cm ஐ, m, cm இல் எழுதுக ......................

08.  நிழற்றப்படாத பகுதியின் பின்னம் என்ன?

09. 3 கிலோ கிராம் 35 கிராம். இது எத்தனை கிராம்? ...........

10. 20m 50cm என்பதைச் சென்ரிமீற்றரில் எழுதுங்கள்.
..............................

11. 8 cm, 4cm — இச்செவ்வகத்தின் சுற்றளவு யாது?

12. 7/10 தசமதானத்தில் எழுதுக.......................

13. பிரதான திசைகள் எவை?..........................

14. லீப் வருடத்தில் பெப்ரவரி மாதத்தில் எத்தனை நாட்கள்?
..........................

15. ஒரு பாத்திரத்தில் 5*l* 400 *ml* பால் இருந்தது. அதில் 3*l* 600 *ml* பால் ஒரு தேவைக்குப் பயன்படுத்தப்பட்டது. மீதியாக உள்ள பாலின் அளவு யாது?
..................*l*................*ml*

16. சம்பவத்தின் மீதிப் பகுதியை நிறைவு செய்வதற்குப் பொருத்தமான ஆறு வாக்கியங்களை எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது நான்கு சொற்களாவது இடம் பெறுதல்வேண்டும். அவ்வாக்கியத்தில் எழுவாய், பயனிலைத் தொடர்பு திருத்தமாக இருத்தல் வேண்டும்)

நான் பாடசாலைக்கு நடந்து சென்றுகொண்டிருந்தேன். சிறிதுதூரம் சென்ற பின் வானம் கறுத்தது. மழை பெய்யத் தொடங்கியது. பலத்த மழை பெய்தது. என்னிடம் குடையோ, மெழுகு சேலையோ இல்லை, பாடசாலை தொடங்குவதற்குப் பத்து நிமிடம் உள்ளது.
..............................................

17. வளரும் - இடம்பெயராது - அசையும்



18. வெயில் - குளிர் - மழை - பாதுகாப்பு



கீழேயுள்ள பந்தியில் தரப்பட்டுள்ள பிழைகளைக் கண்டு கவனமாக வாசித்துத் திருத்தி எழுதுக.

காடுகளை அளிப்பதை தடைசெய்யவேண்டும். வீட்டிற்கு இரண்டு மரங்களை வளர்க்கவேண்டும். நகரங்களில் இருக்கும் தொழிற் சாளைகளை நகரங்களிலிருந்து வெளியே அமைக்கவேண்டும். வீடுகளில் குப்பைகளை உரிய இடத்தில் போடவேண்டும். கழிவுக்காழ்வாய்களை மூடிவைக்கவேண்டும்.


19. 1.......... 2.......... 3.......... 4..........

20. மேலுள்ள பந்தியில் பெயர்ச்சொற்கள் இரண்டினை எழுதுக.
1. .................. 2. ..................

கீழ்வரும் செயற்பாடுகளை அவதானித்து இல. 21 முதல் 22 வரையுள்ள வினாக்களுக்கு விடைதருக.


21.  படத்தில் காற்று வீசும் திசை யாது?

A B

22.  சாடியில் தண்ணீர் சரியாக நிற்கும் நிலையைக் காட்டும் உரு எது?

A B

இல. 23 முதல் 27 வரை சரியான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

23.  அருகேயுள்ள பத்திரிகையை அவதானியுங்கள். இது ஒரு ஈழநாடு பத்திரிகையாயின் இந்தப் பகுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளவை யாவை.


24. கடலில் வாழ்ந்து வந்த தவளை ஒரு நாள் பூச்சி ஒன்றைச் சந்தித்தபோது, அதனை உணவாக உட்கொண்டது. இதிலுள்ள உயிருள்ள பிராணிகள் எவை?
..........................................................

25. பசியினால் வாடிய நாய் ஒன்று வீட்டில் உணவு கிடைக்காததால் மரத்தின்மேல் ஏறி அங்கு நின்ற கோழியைப் பிடித்துச் சாப்பிட்டது.
மேலுள்ள வாக்கியம் காட்டும் பெயரெச்சம் ஒன்றினை எழுதுக.
..........................................................

26. வெளிநாட்டில் பலகாலம் இருந்து திரும்பிய தனது தாயைக் கண்ட மயூரன் முகமலர்ந்து சந்தோசமடைந்தான். சந்தோசமடைந்தான் என்பதன் நிகழ்காலம் யாது?
..........................................................


27. மேகங்கள் கருக்கொண்டன. பட்சிகள் தம் கூடு நோக்கிப் பறந்தன. இவ்விரு வாக்கியங்களையும் இணைத்து எழுதுக.
..........................................................


28. கீழுள்ளபடங்களில் அதிபர் ஒருவர் காலையில் எழுந்து பாடசாலை செல்லும் வரையிலான ஒழுங்குகள் தரப்பட்டுள்ளன. இந்தச் செயற்பாடுகளை ஒழுங்குமுறையில் காட்டும் விடையின்கீழ் கீறிடுக.





1. 2, 4, 3, 1, 5   2. 2, 5, 1, 3, 4   3. 4, 5, 1, 2, 3


இல. 29 முதல் 30 வரையுள்ள உருக்களில் அடுத்துவரும் உருக் கோலம் எது எனத்தெரிந்து அதன் இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.

29. 


30. 


இல. 31 முதல் 32 வரையுள்ள எண்கோலங்களில் விடுபட்ட எண்களைக் கணித்து சரியான விடையை விடைக்கோட்டில் எழுதுக.

31. 


32. 


33. கீழே உயரத்தின் அடிப்படையில் ஏறுவரிசைப்படுத்தியுள்ள தாவரங்கள் எவை எனத்தெரிந்து அதன்கீழ் கோடிடுக.
1. வாழை, துளசி, மா, மூங்கில்
2. தென்னை, பனை, மா, வாழை
3. கத்தரி, வாழை, மூங்கில், தென்னை
4. கத்தரி, மூங்கில், வாழை, தென்னை

இல. 34 முதல் 35 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

34. எனது அக்கா கமலாவும், தங்கை மாலாவும் பெண்கள் பாடசாலையில் கல்வி கற்கின்றனர். இவ்வாக்கியங்களை இரண்டு தனித்தனி வாக்கியங்களாக மாற்றுக.
1. ..........................................................
2. ..........................................................

35. இன்று வானத்தில் ஆதவனைக் காணவில்லை. ஆதவன் என்பதற்கு ஒத்தசொல்.
1. சந்திரன் 2. சூரியன் 3. குளிர் 4. வியாழன்

இங்கே மடிக்கவும்



இல. 36 முதல் 37 வரை பின்வரும் பாடலைப் பார்த்து அதன்கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

*கடன் இல்லை கவலை இல்லை*
*கடும் பிணியும் இல்லை*
*காதலுறு விருந்தினரை ஆதரவு செய்வேன்*
*உடனாக உதவிபுரி மனைவி மக்களோடு*
*ஒற்றுமையாய் வாழ்ந்திடுவன் எக்காலும் உண்மை.*

36. பிணி என்பதற்கு ஒத்தசொல் யாது?

37. ஆதரவு என்பதன் எதிர்ச்சொல் யாது?

38. நிமலின் இன்றைய தினத்திற்குரிய வயது 26 வருடங்களாகும். விமலின் இன்றைய தினத்திற்குரிய வயது 6 வருடங்களாகும். இன்றிலிருந்து எத்தனை வருடங்கள் சென்றபின்னர் நிமலின் வயது விமலின் வயதைப்போல் மூன்று மடங்காகும்.

39. பாலன் மாலை நேரம் கடற்கரையால் நடந்துசெல்லும் போது, நிழலானது அவனுக்கு வலது கைப்பக்கத்தில் விழுந்தது. கடற்கரை எப்பக்கம் எனபதைப் பிரித்தெழுதுக.

சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

40.  பணியகம் ஒன்றில் கடமையாற்றும் ஊழியர்களின் படங்கள் அருகேயுள்ளது. ஒருவரின் படம், ஒரு தடவைக்கு மேலும் இருக்கலாம். இந்த அலுவலகத்தில் கடமையாற்றுபவர்கள் எத்தனை பேர்?

T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2004

## அளவையியலும் விஞ்ஞானமுறையும்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

(ஈ) பின்வரும் வாக்கியங்களை குறியீட்டில் அமைத்து உண்மை அட்டவணைப்படி பிரச்சினைகளைத் தீர்க்க.

1. தேர்தல் முடிவடைந்த தினத்தில் மகேஸ் பின்வருமாறு நினைத்தான் நான் தேர்தலில் வெற்றி பெற்றால் உருளைக் கிழங்கை இறக்குமதி செய்யலாம் ஆனால், மகேஸ் தேர்தலில் வெற்றி பெறவில்லை என்பதை முடிவு செய்யலாமா?
2. யுத்தம் பற்றி A,B எனும் இரு இராணுவ ஆய்வாளர் தமது கருத்துக்களை !பின்வருமாறு கூறினார்கள்.

A- சமாதானம் குழப்பமடையும் எனின் தேர்தல் ஏற்படாது என்பதுடன் யுத்தம் நடைபெறும்.

B- சமாதானம் குழப்பமடை அல்ல அல்லது யுத்தம் இடம் பெறவில்லை இவ்விருவரின் கூற்றுக்களில் இருந்து யுத்தம் இடம்பெறவில்லை என்று வலிதான முடிவை பெறலாமா?

07. பின்வரும் வாக்கியங்களை சுருக்க திட்டத்தின் துணையுடன் குறியீட்டில் அமைத்து அவை வலிதானதா? வலியற்றதா? என்பதை எடுகூற்றுக்களில் இருந்து முடிவை பெறுவதன் மூலம் காட்டுக?

1. கண்டி, காலி இரண்டில் ஒன்று மட்டுமே, அழகானது எனின் பேராதனை அழகானது அல்ல என்பதால் பேராதனை அழகானது எனின் கண்டி அழகானது ஆகும்.
2. யுத்தமும் சமாதானமும் ஏற்படும் எனின் அபிவிருத்தி நிகழாது என்பதால் அபிவிருத்தி நிகழும் எனின் ஒன்றில் யுத்தம் இல்லை சமாதானம் இல்லை.
3. தசரதன் காடு செல்வான் எனின் ராமன் நாடு செல்வான் எனத்தரப்படின் சீதையும் கூனியும் செத்துப்போவர் ஆகவே சீதை சாகப்போகவில்லை எனின் தசரதன் காடு செல்வான்.
4. இந்தியா வெற்றி அடையும் எனின் இலங்கை வெற்றியடையும் இந்தியாவும் இலங்கையும் வெற்றியடையும் எனின் அவுஸ்ரேலியா தோல்வி அடையும் ஆயின் தென்னாபிரிக்கா உலக கிண்ணத்தை கைப்பற்றும் ஆகவே இந்தியா வெறறி அடையும் எனின் ஒனறில் தென்னாபிரிக்கா அல்லது கென்யா உலககிண்ணத்தை கைப்பற்றும்.

08. அ) அளவையியலின் தோற்றங்களின் பயன்பாட்டைக் கூறுக?

ஆ) பின்வருவனவற்றை உதாரணத்துடன் விளக்குக?
1. உபபெறுகை 2. நாற்சூத்திரமும் / அல்லாதவையும்.
3. நிபந்தனை நேரல் பெறுகை.

இ) பின்வருவன எவையேனும் 5 இற்கு சிறுகுறிப்பு எழுதுக?
1. ஒழுக்கவியலும் அழகியலும்
2. இருமதிப்பு அளவை
3. அரிஸ்ரோட்டல் அளவையியலும் எல்லைகளும் பலவீனமும்
4. எளிய வாக்கியம் கூட்டுவாக்கியம்
5. சுருக்க நியாயத் தொடை
6. மறுதலையும் எதிர்மறையும்

### பகுதி III

10. அ) பின்வரும் நியமமில் போலிகளை இரண்டு உதாரணத்துடன் விளக்க.
1. பொருந்தாத முடிவு 2. தவறான அதிகாரப் போலி
3. பிரிவு நியாயம் 4. முடிவு மேற்கொள்ளல் போலி.

ஆ) பின்வரும் போலிகளை இனங்கண்டு விளக்குக?
1. எல்லா இலங்கையரும் புகைப்பிப்பவர் ஆவார் என்பதைக்கொண்டு இந்திய ஜனாதிபதி புகைப்பிடிப்பவர் ஆவர்.
2. இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் சமாதானம் ஏற்படும் பேதெல்லாம் கடலில் யுத்தம் நடக்கிறது எனவே கடலில் யுத்தம் நடைபெறுவதற்கு காரணம் இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் சமாதானம் ஏற்படுவது ஆகும்.
3. தேர்தலில் போட்டியிடும் சுதந்திரம் யாப்பினால் எழுதப்பட்டது ஆகும் அது கடந்தவாரம் பெரேரா என்ற வேட்பாளரை கொலை செய்துவிட்டு பண்டா தேர்தலில் போட்டியிட்டமை அவரின் ஜனநாயக சுதந்திரம் ஆகும்.

11. அ) பின்வருவன சரியானவையா பிழையானவையா எனக் காட்டுக?
1. சகோதரனாயிருப்பது ஒரு சமச்சீர் இன்மை தொடர்பு அல்ல
2. உண்மை அட்டவணை முறையில் மாறிகள் முரணாகும் போது வலிது ஆகும்.
3. கண்டியில் ஓர் ஏரி உண்டு என்பது உறுதியான கூற்றாகும்.
4. (-Pv-Q) என்பதற்கு சமனான குறியீடு (P^Q) அல்ல
5. தேர்லில் A,B இருவரில் ஒருவர் மட்டுமே சித்திபெறுவர் என்பது இருவரும் வெற்றி பெறவில்லை என்பதை உணர்த்தும்.

12. அ) உண்மை பற்றிய கொள்கைகளை உதாரணத்துடன் விளக்குக?

ஆ) பழிக்குப் பழிவாங்குவதே தண்டனையின் நோக்கமாகும். என்பதை உதாரணம்மூலம் விளக்குக?

P. கமல்

## மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில்

# நிரந்தர பரிசோதகர் இன்மையால் பணிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில், நிரந்தர மோட்டார் பரிசோதகர்கள் இன்மையே, எமது திணைக்களத்தின் பாரிய குறைபாடாகும் என, யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

யாழ்.மோட்டார் போக்குவரத்து திணைக்களமானது, உள்ள வளங்களைக் கொண்டு சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. அரச அனுமதிப் பத்திரம் பெறுபவதற்கு விண்ணபபிக்கும் எவருக்கும் ஒரு மாத இடைவெளியில் பரீட்சைகளை நடத்துகின்றோம். தென்பகுதியைப் போல உடனுக்குடன் எழுத்துப்பீட்சை மற்றும் வாகனம் செலுத்துவதற்கான செயன்முறைப்பரீட்சை முதலானவற்றை நடத்துவதற்கு, போதிய வசதிகள் இல்லாமல் இருக்கின்றன.

தற்போது எம்மிடம் உள்ள வாகனப் பரிசோதகர் எமது மாவட்டத்திற்கு மட்டுமன்றி, மன்னார் மாவட்டத்திற்கும் சென்று வரவேண்டியிருப்பதால், செயன்முறைப்பரீட்சைகள் நடத்துவதில் சில காலதாமதங்கள் ஏற்பட்டு வருகின்றன. ஒருவர் செயன்முறைப் பரீட்சையில் சித்தியெய்தத் தவறினால், அடுத்த செயன்முறைப் பரீட்சைக்காக அவர் நீண்ட நாட்கள் காத்திருக்க நேரிடுகின்றது.

இதனைவிட, ஆவணங்களைக் கணினியில் பதிவுசெய்து வைக்கத் தக்கவகையில, இதுவரையில் எமக்கு கணினி வசதி எதுவும் செய்துதரப் படவில்லை. இதுவும் எமது வேலைகள் தாமதப்படுவதற்குக் காரணமாக அமைகின்றது.

எமது திணைக்களத்தில் எந்தவொரு ஊழல்களும் இடம்பெறுவதில்லை. அதற்கு ஏற்றவகையில் எமது ஊழியர்கள் மிகுந்த கடமைப் பாட்டுடன் பணியாற்றிவருகின்றனர்.

மோட்டார் போக்குவரத்து திணைகளத்தால் நியமிக்கப்பட்ட 4 பேர் மாத்திரமே எமது திணைக்களத்தில் பணியாற்றுகின்றனர். மிகுதி 8 பேரும யாழ். அரச அதிபரால் நியமிக்கப்பட்டவர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களில் பிரதம எழுதுவிளைஞர் ஓரிருநாட்களில் ஓய்வுபெறவுள்ளார். இதனால், எமக்கு ஊழியர் பற்றாக் குறை நிலை தோன்றியுள்ளது.

எம்முடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு மக்கள் தமது பிரச்சினைகளைத் தெரிவித்துக்கொள்ளமுடியும். எந்தவித இடைத்தரகர்களும் எமது சேவையில் தலையிடாத வகையில், நாம் மிகவும் கவனமாகச் செயற்பட்டு வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

(ப)

### தென்னைச் செய்கை பயிற்சி வகுப்பு

(சாவகச்சேரி)

மட்டுவில் வடக்கு ஸ்ரீ வேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் - "அம்டா" நிறுவனத்தினரின் ஆதரவுடன், தென்னைப் பயிர்ச்செய்கை சம்பந்தமான பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. இந்த வகுப்பில் சுமார் 100 பயனாளிகள் கலநதுகொண்டனர்.

யுத்தத்தால் அழிந்துபோயுள்ள எமது தென்னை வளத்தை மீளவும் துரிதகதியில் வளர்த்தெடுப்பதற்கு, இந்தப் பயிற்சி வகுப்பு மிகவும் பயனுள்ளதாக அமைந்ததாக, பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டபோது மகள் கருத்துத்தெரிவித்தனர். கலந்துகொண்ட அனைவருக்கும் தென்னைப் பயிர்ச்செய்கைக்கு மானியம் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

### சிவராத்திரி தின நிகழ்வு

யாழ்.மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையம் நடாத்தும், சிவராத்திரிதின நிகழ்வுகள் இன்று மாலை 6 மணியளவில் நிலைய கலையரங்கில் நடைபெறவுள்ளது.

ஆசியுரை, சிறப்புரைகளைத் தொடர்ந்து நாட்டிய நடனம், இன்னிசை கானங்கள் என்பனவும் இடம் பெறவுள்ளன.

## அரசியலில் ஏற்படுகின்ற மாற்றங்களால் அபிவிருத்தி பணிகள் பாதிக்கப்படுகின்றன

### அபிவிருத்தி வங்கி வதிவிடப்பிரதிநிதி தெரிவிப்பு

(வடமராட்சி)

இலங்கையின் அரசியலில் ஏற்படும் மாற்றங்களால், அபிவிருத்தி நடவடிக்கைகளில் தேக்கநிலை ஏற்படுகிறது.

இவ்வாறு, ஆசிய அபிவிருத்தி வங்கியின் வதிவிடப் பிரதிநிதி ஜோன்.கூனி - வடமராட்சி கிழக்கு மீனவசங்கங்களுக்கு சுழற்சிமுறை கடனை வழங்குவதற்காக, 300 லட்சம் ரூபாவை கையளித்த வைபத்தில் கலநதுகொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

எமது நிறுவனத்தின் பலதிட்டங்களை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு - அரசினதும், புலிகளதும் ஒத்துழைப்பேகாரணம். அரசியலில் ஏற்படும் தலையீடுகள் அபிவிருத்தி நடவடிக்கைகளில் தேக்கநிலையினை ஏற்படுத்துகின்றன. சமாதான நடவடிக்கையின் முன்னேற்றத்தை பொறுத்தே, எதிர்காலத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

இலங்கை அழகான நாடு. தற்போது யுத்தத்தினால் இடிந்த கட்டடங்களையே காணக்கூடியதாக இருக்கின்றது.

யாழ்.மாவட்டத்தில் மீன்பிடி - வருமானத்தை பெற்றுக் கொடுக்கும் முக்கிய தொழிலாக இருக்கின்றது. எனவேதான், அதனை அபிவிருத்திசெய்ய இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கி 1960 ஆம் ஆண்டு தொடக்கம் இயங்கிவருகின்றது. இலங்கையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களை அபிவிருத்திசெய்ய, 2000 ஆம் தொடக்கம் பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

நிகொட் திட்டத்தின்கீழ் பல அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏ- 9 வீதி புனரமைப்பு, மின்சாரம், கால்நடைவளர்ப்பு ஆகியவற்றிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியினை வழங்கியுள்ளது. அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு அரசு, புலிகளினது ஒத்துழைப்பே காரணம் என்றார்.

இந்த வைபவத்தில் யு.என்.டி.பி பிரதிநிதி லோறியா, நிகொட் திட்ட பணிப்பாளர் எஸ்.லங்காநேசன், நெதர்லாந்து தூதுவராலயத்தின் செயலாளர் ஜான்.ஹங்கன் ஆகியோர் உரையாற்றினர்.

(17)

### கொம்ரெக் நிறுவனத்தில் தொழில் பயிற்சி ஆரம்பம்

(அராலி)

போரூட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் சுழிபுரத்தில் இயங்கிவரும் "கொம்ரெக்" நிறுவனத்தால் நடத்தப்படும், இந்த ஆண்டிற்கான தொழிற்பயிற்சிகள் கடந்த மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த தொழிற்பயிற்சியில் புதிதாக மரவேலை பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சியில் பயிலவிரும்பும் ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கமுடியும். இவர்களுக்கு மாதாந்தம் ஊக்குவிப்புப்பணமும் வழங்கப்படும் என நிறுவனத்தின் நிர்வாக உத்தியோகத்தர் சதீசன் தெரிவித்தார். (118)

### புலமைப் பரிசில் பெறுபேறுகள

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை தந்தைசெல்வா தொடக்கநிலைப் பள்ளியிலிருந்து, 2003 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவாகளில் மா.நாகவதனி-145, தே.ராகவி - 138, இ.மதுஷன்-130 ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

## ஏ-9 வீதியால் செல்லும் வாகனங்களை திடீர் பரிசோதனையிடும் பொலிஸார்!

சாவகச்சேரி பொலிஸார் - ஏ-9 வீதியில் செல்லும் மினிபஸ்களையும், மோட்டார் வாகனங்களையும் தீவிரமாக பரிசோதிக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

சகல வாகனங்களும், நிறுத்தப்பட்டு, வாகனங்களின் ரயர்கள், சாரதி அனுமதிப்பத்திரம், வரிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் ஆகியன சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னரே, வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்படுகின்றன. இவை இல்லாத வாகனங்களின் உரிமையாளர்களிடம் தண்டப்பணம் உடனடியாக அறிவிடப்படுகின்றது. ரயர் தேய்ந்து காணப்படும் வாகனங்களின் சாரதிகள் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்படுகின்றனர்.

இந்த நடவடிக்கை திடீர்திடீரென ஏ-9 வீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கடந்த வியாழக்கிழமை கைதடி, நுணாவில் பகுதியில் இடம்பெற்ற வீதிவிபத்தில் ஒருவர் உயிரிழந்து பலர் படுகாயமடைந்ததையடுத்தே, இந்த அதிரடி நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## பாலைதீவு அந்தோனியார் ஆலய திருவிழா மார்ச் 23 இல் ஆரம்பம்!

பிரசித்திபெற்ற பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தக் கொண்டாட்டங்கள் - அடுத்த மாதம் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கடந்த வருடங்களைப் போன்றே, மட்டுப்படுத்தப்பட்ட அளவில் யாத்திரிகர்கள் ஆலயத்திற்கு சென்றுவர அனுமதிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறு பயணிக்கும் யாத்திரிகர்கள் குடிநீர் மற்றும் தேவையான உணவுவகைகளை எடுத்துச்செல்ல வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது. இவ்வாறு சென்றுவருவதில் பல சிரமங்களை அனுபவிக்க நேர்வதால், பெருமளவில் யாத்திரிகர்கள் பங்குகொள்ளும்நிலை அரிதாகவே இருந்துவருகிறது.



வடமராட்சி கிழக்கு குடத்தனை அ.த.க.பாடசாலை வருடாந்த மெய்வல்லுனர் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி கலாநிதி எஸ்.கதிரவேற்பிள்ளை உரையாற்றுவதையும் படத்தில் காணலாம்.

## மந்திகை வைத்தியசாலைச் சந்தி இராணுவ முகாம் அகற்றப்பட்டது

(வடமராட்சி)

மந்திகை வைத்தியசாலைச் சந்தியில் அமைந்திருந்த இராணுவ முகாம் முற்றாக அகற்றப்பட்டு, இராணுவத்தினர் வேறு இடங்களுக்குச் சென்றனர். மந்திகை வைத்தியசாலைக்கு இரவு வேளைகளில் புலோலி, துன்னாலை, வல்லிபுரக் குறிச்சிப் பகுதியிலிருந்து வருவோர் இதுவரை அந்த இடத்திற்கூடாக பயத்துடனேயே பிரயாணம் செய்ய வேண்டியநிலை இருந்ததாகவும், இப்போது சுதந்திரமாக அந்த வழியே எந்த நேரமும் சென்று வரக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாவும் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலைச் சூழலிலுள்ள வியாபார நிலையங்களும், இரவு வேளைகளில் திறந்திருப்பதால, வைத்தியசாலை நோயாளர்கள் தேவையான நேரத்தில் பொருட்களைக் கொள்வனவு செய்யக்கூடிய வாய்ப்பும் இதனால் ஏற்பட்டுள்ளது.

(13)


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஐந்தாவது பிறந்தநாள் வாழ்த்து



பெயர் : சி. அபிவர்ணா

முகவரி : றோஸ் பவனம், அல்வாய்.




வல்வெட்டி விநாயகர் வித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின் போது, பிரதம விருந்தினர் சி.நந்தகுமார் (பிரதிக்கல்விப் பணிப்பாளர் திட்டமிடல்) சிறப்பு விருந்தினர் ஜோக்கிம் பெர்னான்டோ, இலங்கை வானொலி யாழ்.சேவை அறிவிப்பாளர் ஆகியோர் அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம்.

## மானிப்பாயில் 5 தினங்கள் பிரார்த்தனைத் திருவிழா

எதிர்வரும் 25 ஆம் திகதி புதன் கிழமை தொடக்கம் 29 ஆம் திகதி வரையான ஐந்து தினங்கள் - மானிப்பாய், செல்லமுத்து மைதானத்தில் தினமும், மாலை 4.30 மணிக்கு "பிரார்த்தனைத் திருவிழா" நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

பாஸ்ரர் டி.ஜி.எஸ் தினகரன், பாஸ்ரர் போல் தினகரன் ஆகியோர் திருவிழாப் பிரார்த்தனைகளை நடத்துவர்.

அதேவேளை மானிப்பாய் பிரதேசசபை கலாசார மண்டபத்தில், 26 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் - 28 ஆம் திகதி சனிக்கிழமை 8.30 மணிக்கு சாம், ஹேரன், ஸ்வீட்டி ஆகிய சிறுவர், சிறுமிகளின் சிறப்புப்பாடல்களும் இடம் பெறும்.

பாஸ்டர்கள் டி.ஜி.எஸ் தினகரன், பால் தினகரன், ஸ்டெல்லா தினகரன், சகோதரி இவாஞ்சலி பால் தினகரன் ஆகியோர் தேவசெய்திகளை வழங்குவார்கள் (206)

புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் - பகுதி VIII - சிவா சின்னப்பொடி

# தொடரும் அகதிவாழ்வின் அவலங்கள்



ஐரோப்பாவுக்குப் புலம்பெயர்வது என்றவுடன் ஏதோ யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்வதற்குப் பயணச்சீட்டு பதிவுசெய்து, ஒரு பேருந்தில் ஏறிப்போய் இறங்குவது போன்றது என்று பலர் நினைக்கிறார்கள்.

இங்குள்ள பல பிரயாண முகவர்கள் தொடக்க காலத்தில் அப்படித்தான் பிரசாரம் செய்து வந்தார்கள். கட்டுநாயக்கா விமானநிலையத்தில் விமானம் ஏறிவிட்டால் - பாரிஸிலோ, சூரிச்சிலோ, பிராங்போட்டிலோ சுலபமாகப் போய் இறங்கிவிடலாம் என்றுதான், இங்கிருந்து ஆரம்பகாலத்தில் புறப்பட்ட எல்லோரும் நம்பினார்கள்.

ஆனால், அங்கே மொஸ்கோவிலோ (ரஷ்யா), பெல்கிறேட்டிலோ (யூகோஸ்லாவியா), சோபியாவிலோ (பல்கேரியா), பராக்கிலோ (செக்கஸ்லோவியா) சென்று இறங்கிய பின்புதான் பிரயாண முகவர்களின் பூச்சுற்றல்கள் பலருக்குப் புரியவந்தன.

இந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் தரைவழி எல்லைகளுக்கூடாகவே, அநேகமான ஈழத்தமிழர்கள் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்திருக்கிறார்கள்.

விமானங்களில் நேரடியாகச் சென்று, மேற்கு ஐரோப்பிய தலைநகரங்களில் இறங்கி, அரசியல் தஞ்சம் கோரியவர்கள் மிகக் குறைவாகும்.

ஆரம்பகாலத்தில் மேற்கு ஐரோபபாவுக்குள் நுழைவதற்கு, 6 தரைவழிப் பாதைகள் இருந்தன.

உக்கிரைன், போலந்து வழியாக ஜேர்மனிக்குச் செல்வது ஒருவழி.

இரண்டாவது - செக்கஸ்லோவியா ஊடாக ஜேர்மனிக்குச் செல்வது.

மூன்றாவது - ருமேனியா, ஹங்கேரி, ஒஸ்ரியா வழியாக சுவீஸ் அல்லது ஜேர்மனிக்குச் செல்வது.

நான்காவது - பல்கேரியா, யூகோஸலாவியா, இத்தாலி வழியாக பிரானசுக்குச் செல்வது.

ஐந்தாவது - யூகோஸலாவியா, ஒஸ்ரியா வழியாக சுவிஸ், ஜேர்மனி, பிரான்சுக்குச் செல்வது.

ஆறாவது - கிறிஸ், இத்தாலி வழியாகப் பிரான்சுக்குச் செல்வது.

இந்த நாடுகளில் எல்லாம் நம்மவர்களை மறைவான பாதைகளில் அழைத்துச் செல்வதற்கென்று!, அந்தந்த நாடுகளைச் சேர்ந்த உள்ளூர் முகவர்கள் இருந்தார்கள்.

பணத்தில் மட்டும் குறியாக இருக்கும் இவர்கள் - கால்நடைகளை நடத்துவதைப் போலவே, நம்மவர்களை நடத்தியிருக்கின்றார்கள்.

ஒரு சிறிய அறையில் 40, 50 பேரைத் தங்க வைத்தது. ஒருவேளை சாப்பாடு மட்டும் கொடுத்தது. சில நாட்களில் சாப்பாடே கொடுக்காமல் விட்டது, தட்டிக்கேட்டவர்களை அடித்து உதைத்து மிரட்டியது எனறு இவர்களிடம் நம்மவர்கள் பட்ட அவலங்களை நிறையவே சொல்லலாம்.

எல்லைகடக்கும்போதுகூட - ஆடு, மாடுகளைப் பட்டிக்கு அழைத்துச் செல்வதைப்போல உருட்டி, மிரட்டிப் பயமுறுத்தி அழைத்துச்சென்று மற்றும் மலைச்சரிவுகளில் தள்ளி உருட்டிவிட்ட கதைகள் இருக்கின்றன.

கொடும்பனி வீழ்ச்சிக் காலத்தில் எல்லைகளைக் கடந்தபோது, குளிரில் விறைத்து உயிர்விட்டவர்கள் நிறையப்பேர்.

தாயும், பிள்ளையும் சென்ற இடத்தில் - பிள்ளை குளிரில் இறந்துவிட, அதைக் காட்டில் பனிக்குவியலுக்குள் புதைத்துவிட்டு, தாய் எல்லை கடந்த சம்பவங்களும்...

தாய் இறந்துவிட, அவளைப் புதைத்துவிட்ட பிள்ளையை - கூட வந்தவர்கள் தந்தையிடம் கொண்டு போய்ச் சேர்த்த சம்பவங்களும்...

கணவனும், மனைவியும் சென்ற நேரத்தில் இருவரில் ஒருவர் இறந்துவிட, அவரைப் புதைத்துவிட்டு மற்றவர் எல்லை கடந்த சம்பவங்களும் நிறைய உண்டு.

காலளவு தண்ணீர், கழுத்தளவு தண்ணீர் என்று பிரயாண முகவர்கள் சொல்வதை நம்பி - கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் ஆறுகளில் இறங்கி, ஆற்று நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தவர்கள் பலர்.

20 முதல் 25 பாகை செண்ரிகிறேட் வெப்பநிலை உள்ள மார்கழி மாத கடும்பனிக் குளிரை - 'தாங்க முடியாத குளிர்' என்று சொல்லும் நீங்கள் (-) மறை 15 முதல் 20 பாகை செண்ரிகிறேட் வெப்பநிலையில், தண்ணீரெல்லாம் பனிக்கட்டியாக உறைந்து, உதடுகள், கை, கால், நக இடுக்குகள் எல்லாம் வெடித்து, இரத்தம் கசியும் ஒரு சூழ்நிலையில், பத்துப் பதினைந்து கிலோ மீற்றர் தூரம் கடந்து செல்வதென்பது... எப்படி இருக்கும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்.

எல்லை கடக்கும்போது, நம்மவர்களுக்கு ஏற்பட்ட - அரைவாசிக்கு மேற்பட்ட மரணங்கள், தலையில் குளிரேறி - மூளைக்கலங்களுக்குச் செல்லும் இரத்த நரம்புகள் வெடிப்பதால் ஏற்பட்டிருக்கிறது.

சுவாசிக்கமுடியாமல் மூச்சு முடடியும் பலர் இறந்திருக்கிறார்கள். புலம்பெயர்ந்தபோது, இடம்பெற்ற நம்மவர்களின் மரணங்கள் தொடர்பான, உரிய பதிவுகள் இதுவரை செய்யப்படவில்லை.

சட்டபூர்வமான வழிகளில் இந்தப் புலம்பெயர்வுகள் நடைபெறவில்லையாதலால், இந்தப் புலம்பெயர்வில் இடம்பெற்ற மரணங்கள் - பெருமபாலும் பதியப்படாமலே போய் விட்டது.

> **தண்ணீரெல்லாம் பனிக்கட்டியாக உறைந்து, உதடுகள், கை, கால், நக இடுக்குகள் எல்லாம் வெடித்து, இரத்தம் கசியும் ஒரு சூழ்நிலையில், பத்துப் பதினைந்து கிலோ மீற்றர் தூரம் கடந்து செல்வதென்பது... எப்படி இருக்கும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்.**

இந்தச் சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உடன் வந்தவர்கள் என்று குறிப்பிட்ட சிலர் தெரிவித்த தகவல்களின் அடிப்படையிலேதான், இந்தப் பதிவுகள் அங்காங்கே சிறிய குறிப்புகளாக இருக்கின்றன.

இதுவரை, 200 இலிருந்து 300 பேர்வரை இவ்வாறு எல்லைகடக்கும்போது மரணித்திருக்கலாம் என்று ஊகிக்கப்படுகின்றது. சிலவேளைகளில், இந்தத் தொகை கூடவும் இருக்கலாம்.

கிறிஸிலிருந்து அல்லது துருக்கியிலிருந்து இத்தாலிக்குக் கப்பல் மூலமாகப் புலம்பெயர்ந்தபோது, பலதடவைகள் - சிறிய படகுகளில் நடுக்கடலில் இறக்கிவிட்டுப் போய், படகு கவிழ்ந்து நிறையப்பேர் உயிரிழந்திருக்கிறார்கள்.

சில சம்பவங்களில் - படகு முற்றாக மூழ்கி, அதிலிருந்த அனைவரும் உயிரிழந்தபோது, யார்? எவர்? எத்தனை பேர்? என்ற விபரங்கள் வெளிவருவதில்லை.

அவர்களைக் கப்பலேற்றிய பிரயாண முகவர்களுக்கும், படகுகளல் இறக்கிவிட்ட கப்பல் கப்டன்களுக்கும் மட்டுமே தெரிந்த அந்த விபரங்கள்- மறைக்கப்பட்டு விடுவதால், இந்த மரணங்கள் வெளியே தெரிவதில்லை.

கிறிஸ் மற்றும் துருக்கியிலிருந்து மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு வந்துசேர்ந்த பல இளைஞர்கள் சொல்லுகின்ற தகவல்களை நம்பினால், இந்தத் தொகை 500 தாண்டிவிடும்.

1990 இல் ஒஸ்ரியாஸ் அல்ப்ஸ் மலைத்தொடர்களூடாக இடம்பெற்ற எல்லைகடப்பின்போது, யூகோஸலாவியாவின் அப்போதைய சிலவோனியா (தற்போது அது தனிநாடு) மாநிலத்திலிருந்த, இரண்டு எல்லை கடத்தும் குழுக்களுக்கிடையில், நடுக்காட்டில் இடம்பெற்ற மோதலில் - 2 பெண்கள் உட்பட, 8 ஈழத்தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாக ஒரு தகவல் இருக்கிறது.

இந்தப் பாதையில், எல்லை கடப்பில் ஈடுபடும் முகவர்கள் - இதைச் சொல்லி நம்மவர்களை மிரட்டுவதுதான் இந்தத் தகவலுக்கான மூலமாக இருந்தது.

1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 திகதி இரவு - ஒஸ்ரிய சிலவோனிய எல்லையில் இவ்வாறு ஒரு குழுமோதல் நடந்ததற்கான பதிவு சிலவோனியாவின் எல்லைப்புற நகரான மரிபோர் காவல் நிலையத்தில் உள்ளதாக, 1993 ஆம் ஆண்டு பிரானசின் 'லுமொண்ட்' பத்திரிகையில் ஒரு குறிப்பு வெளிவந்திருந்தது.

சட்டவிரோத குடியேற்றக்காரர்களை அழைத்து வருவதில் 'மாபியா'களின் பங்கு என்ற தலைப்பில் - பிரான்சுவா பேர்னாட் என்பவர் எழுதியிருந்த கட்டுரையிலேயே அந்தக் குறிப்பு இருந்தது. இதில், உயிரிழப்புக்கள் பற்றிய விபரம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. *(தொடரும்...)*

இறையாசி பெற ஓர் அரிய வாய்ப்பு!

இயேசு அழைக்கிறார்
யாழ்ப்பாணம் பிரார்த்தனைத் திருவிழா

பெப்ரவரி 2004
25 முதல் - 29 வரை
(புதன் முதல் ஞாயிறு வரைக்கும்)

தினமும் மாலை 4.30 மணிக்கு
இடம் :
செல்லமுத்து மைதானம்,
மானிப்பாய்

அருளுரை, பிரார்த்தனை வழங்குபவர்கள்
Dr. டி.ஜி.எஸ். தினகரன்
Dr. பால் தினகரன்
Dr. ஸ்டெல்லா தினகரன்
சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன்

அனுமதி இலவசம்!



தினமும் அன்பு பிள்ளைகள்
சாம், ஷேரன், ஸ்வீட்டியின்
சிறப்பு பாடல்களைக் கேட்டு இன்புறுங்கள்.

பயிற்சி கூட்டங்கள்
(ஆழமான ஆவிக்குரிய ஜீவியம் ஜீவிக்க)
பெப்ரவரி 26 முதல் 28 வரை
காலை 8.30 மணிக்கு
இடம் : வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
(மானிப்பாய் பிரதேசசபை கலாசார மண்டபம், மானிப்பாய்)
இறைபக்தியில், நம்பிக்கையில்,
ஆன்மீக வாழ்வில் எழுச்சிப் பெற,
அன்றாட வாழ்வில் பிரச்சினைகள், துக்கங்கள்,
சரீர நோய்கள் இவற்றிலிருந்து
இறையருளால் விடுதலை பெற
சிறப்புப் பிரார்த்தனைகள்
இடம்பெறும்



தலைமை ஒருங்கிணைப்பாளர் : பாஸ்டர் சாம் ராஜசூரியர்
மேலும் விவரங்கள் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
யாழ்ப்பாணம் பிரார்த்தனை திருவிழா அலுவலகம்,
சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய், யாழ்ப்பாணம்
☎ : 021-222-3204, 021-222-2659 மொபைல் : 0777174500

மும்பை (இந்தியா) நகரில் பிரார்த்தனை விழாவில் திரண்டிருந்த மக்கள் திரளின் ஒரு பகுதி!



நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்*
*பண்புஇல்சொல் பல்லார் அகத்து.*

திருக்குறள்

# நமது நோக்கு

## வெறும் அறிக்கைகளும், வெற்று வார்த்தைகளும்...

நிறைவேற்று அதிகாரவலுமிக்க ஜனாதிபதி பதவியிலிருந்து விலகிக்கொள்ள - அதுவும் நாளைக்கே விலகிக் கொள்ளக்கூட - தான் தயாராக இருப்பதாகச் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போது குறிப்பிட்டுள்ளாராம்.

ஜனாதிபதியானவர் இதேபோன்ற கருத்துக்களை வெளிப்படையாக 1994 முதல் இன்றுவரையான காலப் பகுதிக்குள் எத்தனையோ தடவை கூறியபோதும், அந்தப் பதவியை இறுகப்பற்றிக்கொள்வதிலும், அந்தப் பதவி வழங்கும் அதிகார பலத்தைப் பிரயோகித்து எதிர்க்கட்சிகளையும் ஏனைய தனது அரசியல் பகையாளிகளையும் அடக்கியொடுக்கவும், பதவிகளில் இருந்து தூக்கியெறியவும், நடவடிக்கைகளை மேற்கொண்டதைவிடவும், தேசநலன் கருதிய எந்தச் செயற்பாட்டையும் அவர் நடைமுறைப்படுத்தியதாக வரலாறே கிடையாது.

இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால், இதே ஜனாதிபதிப் பதவியின் அதிகாரவலுவினை - அதன் உச்சப் பயன்பாட்டுடன் பயன்படுத்தி, தமிழ்மக்களுக்கு எதிரான ஒரு இன அழிப்பு யுத்தத்தினை - சமாதானத்திற்கான போர் என்ற பெயரில் ஏழாண்டு காலம் நடத்தி, தமிழ்மக்களின் இயல்புவாழ்வை முற்றாக அழித்து, ஆயிரக் கணக்கிலானோரைக் கொன்றழித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அப்போதெல்லாம் நிறைவேற்று அதிகாரப் பலத்தினைப் பயன்படுத்தி, தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கி, அதற்கேற்ப அரசியல் யாப்பில் திருத்தங்களை மேற்கொண்டு, நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தித் தேசத்தில் அமைதியை உருவாக்கக்கூடிய வாய்ப்பிருந்தும்கூட போரை நடத்துவதில் மூர்க்கத்தனமாக இருந்த ஜனாதிபதி...

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சி பீடம் ஏறியதும், அது சமாதான முன்னெடுப்புகளை ஆரம்பித்தபோதும், தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டபோதும், அதன் அவசியத்தன்மையை உணர்ந்துகொண்டு, அதற்கான ஒத்துழைப்பினைத் தானே முன்வந்து, ஆலோசனைகூறி நெறிப்படுத்தி வழங்கவேண்டிய பொறுப்பினை - அர்த்தமற்ற காரணங்களைக் கூறி, தட்டிக்கழித்ததுடன், தன்னுடைய அதிகாரத்தில் 70 சதவீதத்தை இன்னும் தான் பயன்படுத்தவில்லையென்றும், விரைவில் அதனைப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்படும் எனவும், அரசையும் அதன் சமாதான முயற்சிகளையும் எச்சரித்து மிரட்டிவந்த ஜனாதிபதி...

இடைக்கால நிர்வாக அதிகாரசபைக்கான திட்டவரைபை விடுதலைப் புலிகள் முதன்முதலில் அரசிடம் கையளித்த வேளையில்- பிரதமர் ரணில் நாட்டில் இல்லாத சூழ்நிலையிலும், இதே நிறைவேற்று அதிகார வலுவைப் பயன்படுத்தி, சமாதான முயற்சிகளுக்கு இடையூறை ஏற்படுத்தும் வகையில், பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று முக்கிய அமைச்சுக்களைத் தன்வசம் எடுத்து, அரசியல் குழப்பம் ஒன்று ஏற்படவும், அமைதி முயற்சிகள் பின்னடைவைக் காணவும் காரணமான ஜனாதிபதி...

சபாநாயகருக்கு, பெரும்பான்மை பலத்துடன் இருக்கும் மக்களால் தெரிவான அரசை எக்காரணம்கொண்டும் கலைக்கப்போவதில்லையென உத்தரவாதம் அளித்துவிட்டு, சில வாரங்கள் கழியும் முன்னரே - ஒரு நள்ளிரவு வேளையில், இதே நிறைவேற்று அதிகார பலத்தைப் பயன்படுத்தி, ஆட்சியைக் கலைத்து தேர்தலுக்கான உத்தரவை வெளியிட்ட ஜனாதிபதி...

இப்போது நிறைவேற்று அதிகார ஆட்சிமுறையை நாளைக்கே நீக்கிவிடத் தயார் என்று அறிக்கை விடுகிறார் என்றால், அதனை அறிவிலிகளும், அரசியல் அறியாதோரும் மட்டுமே நம்பமுடியும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை நீக்குமாறு 1994 இலேயே மக்கள் தேர்தல் மூலம், மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப் பலத்தை அளித்து ஆணை வழங்கிவிட்டபோதும், இன்றுவரை அதனை நிறைவேற்ற மனமற்று, அந்தப் பதவி அதிகாரவலுவை தன்னால் முடிந்த மட்டும் பயன்படுத்திவரும் ஜனாதிபதி - இப்போது அதுவும் இந்தத் தேர்தல் சமயத்தில் அதனைக் கைவிட்டு விடுவாரா என்ன?

இது ஒருபுறமிருக்க, சமாதானப் பேச்சுவாத்தைகளுக்கு மக்கள் ஆணை அவசியமா...! அதற்காகவே தேர்தலை நடத்துகிறாராம்! 1994 இலும்... 2002 இலும் மக்கள் சமாதானத்திற்கான ஆணையை வழங்காமல், பூனையையா வழங்கினார்கள்.

சகல மக்களும் அச்சமின்றி வாழ்வதற்கு நிலையான சமாதானம் வேண்டுமெனக் கூறும் ஜனாதிபதி - இலங்கையின் வரலாற்றிலேயே இன முரண்பாடு போராக வெடித்ததன் பின்னர், கடந்த இரண்டு ஆண்டுகளாகத்தான் சமாதானச் சூழல் தொடர்ந்து நீடித்து வருகின்றது என்பதை அனைவரும் அறிவர்.

அந்தச் சூழலைப் பாதுகாத்து சமாதானப் பேச்சுக்களை அடுத்த கட்டத்தை நோக்கி முன்னெடுக்கத் தடையாக இருக்கும் ஜே.வி.பி. போன்ற இனவாத சக்திகளுடன் கூட்டமைப்பை ஏற்படுத்திக்கொண்டு, தனது பதவியையும் அதிகாரத்தையும் பாதுகாக்க நினைக்கும் ஜனாதிபதி...

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை கைவிட நாளையே தயார் என்று கூறுவதை எப்படி நம்பமுடியும்...?

வேண்டுமானால், முதலில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்துவிட்டு, அறிக்கை விட்டும் பார்க்கலாம்...!

அந்தளவு துணிச்சலும், நேர்மையும் ஜனாதிபதியிடம் தற்போது இருப்பதாகத் தெரியவில்லை.

# நாடும் நடப்பும்




# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கிடைக்கும் சம்பளமும்-சலுகைகளும்

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் ஆரம்பமாகியிருக்கும் சூழலில் - தேர்தல் காய்ச்சல் சூடுபிடிக்க ஆரம்பித்திருக்கிறது.

கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றின் மக்கள் கருத்துப் பக்கத்தில் - நாடாளுமன்றத்தின் 2004 ஆம் ஆண்டுக்கான உறுப்பினர்கள் வாடகைக்குத் தேவை, என்ற விளம்பர வடிவிலான கடிதம் ஒன்று பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கடிதத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தகைமைகள் மற்றும் வசதிகள், வாய்ப்புக்கள் குறித்து விலாவாரியாக விளக்கப்பட்டிருக்கிறது.

எல்லோரும் அலறியடித்துக்கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களாக வரவேண்டும் என்ற குறியோடு போட்டியில் குதிப்பதற்கு என்ன காரணம் என்பதை இந்த வசதிவாய்ப்புப் பட்டியலைப் பார்த்தால் விளங்கிவிடும்.

**சம்பளம்** - மாதாந்தம் ரூ.22 ஆயிரத்து 100.

**ஏனைய படிகள்** -

1. பொழுதுபோக்கு - மாதாந்தம் ரூ.1000
2. எரிபொருள் - மாதாந்தம் ரூ.7500
3. செல்போன் - மாதாந்தம் ரூ.2000
4. நாடாளுமன்ற அமர்வுக்கு - மாதாந்தம் ரூ.4000
5. சாரதிகளுக்கு - மாதாந்தம் ரூ.3500

(ஒன்றுக்கு மேற்பட்ட சாரதிகளைப் பயன்படுத்தலாம்)

**ஏனைய வசதிவாய்ப்புக்கள்** -

1. சர்வதேச அழைப்பு வசதிகளுடனான தொலைபேசி.
2. சுங்கத்தீர்வையின்றி போட்டோப்பிரதி இயந்திரம் - மாதாந்தம் ரூ. 685
3. சுங்கத் தீர்வையற்ற விலையில் தட்டச்சு இயந்திரம் மாதாந்தம் ரூ. 425 படி
4. 30 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான ஆடம்பர சொகுசுக் கார்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி.
5. அடுத்த 5 வருடங்களில் இன்னொரு சொகுசுக் கார் இறக்குமதி செய்வதற்கான அனுமதி.
6. கொழும்பு நகரில் இருந்து 25 மைல்களுக்கு அப்பால் தெரிவுசெய்யப்பட்டு வசிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மூன்று படுக்கையறைகளுடன், இரண்டு அடுக்கு வீடு மற்றும் வசதிகள். (இதற்கு வாடகையாக ரூ.1000 மட்டும் அறவிடப்படும்).

**ஏனைய வசதிகள்** -

உணவு - நாடாளுமன்ற உணவுச்சாலையில் மிகக் குறைந்த விலையில் உணவு வசதி.

- வேறு இடத்தில் 600 ரூபா பெறுமதியான காலை உணவு 6 ரூபாவுக்குக் கிடைக்கும்.
- வேறு இடத்தில் 1500 ரூபா பெறுமதியான மதிய உணவு ரூ.15 இற்குக் கிடைக்கும்.
- தேநீர் 45 சதத்துக்கும், பால் தேநீர் 60 சதத்துக்கும் காலையில் கிடைக்கும்.
- மாலையில் தேநீரும், இரண்டு பேஸ்ரிகளும் இலவசமாகக் கிடைக்கும்.
- வாகனம் ஒன்றுக்கு வருடாந்தம் 5 ரயர்கள், மற்றும் ரியூப்கள்.
- 10 மில்லியன் ரூபாவுக்கான இலவச ஆயுட் காப்புறுத்தி வசதி.
- ஐந்து வருடங்களின் பின்னர் ஓய்வூதியம்.
- நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐந்து வருடங்கள் பூர்த்தியாக முன்னர் விலகிச்செல்வதானால், 4 லட்சம் முதல் 5 லட்சம் ரூபாவரை விலகச்செல்லும்போது கிடைக்கும்.
- பதவிக்காலத்தில் தபால் செலவுப்படியாக மாதாந்தம் ரூ.7500 கிடைக்கும்.
- இலவச மருத்துவ வசதி.
- ஆகக் குறைந்தது ஐந்து வெளிநாட்டு கடல் கடந்த பயணங்களுக்கான முழுச்செலவும் அரசாங்கம் பொறுப்பேற்கும். இலவச எழுதுபொருட்கள் மற்றும் பல.

இந்தளவு வசதிகளையும் பெறவேண்டுமானால் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராகவேண்டும்.

இதற்கு என்ன தகைமை வேண்டும்.

கல்வித் தகைமை அவசியம் இல்லை.

வயது 18 - 85 இற்கும் இடையில்.

விண்ணப்பதாரிகளுக்கு அகன்ற வாயும், நீண்ட நாக்கும் இருந்தால் முன்னுரிமை கிடைக்கும்.

சட்டவிரோத ஆயுதங்களைக் கையாளவும், பாதாள உலகக் குழுக்களுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தால் - அது மேலதிக தகைமையாகக் கருதப்படும் என்று கொழும்பு பத்திரிகையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஓய்வூதியப்பணத்தை இழக்கும் நிலையில் 42 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள்

(கொழும்பு)

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் முதன்முறையாக தெரிவு செய்யப்பட்ட 42 நாடாளுமன்ற உறுப்பினர்கள் - ஓய்வூதியத்தைப் பெறும் வாய்ப்பை இழந்திருப்பதாகத் தெரியவருகிறது. இவரகள் மீண்டும் அடுத்த தேர்தலில் தெரிவு செய்யப்படாவிட்டால், ஓய்வூதியத்தைப் பெறமுடியாது. ஐந்து வருடங்கள் பதவி வகித்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே ஓய்வூதியம் வழங்கப்படுவது வழக்கமாகும்.

கடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 16 உறுப்பினர்களும், பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த 12 உறுப்பினர்களும், ஜே.வி.பியைச் சேர்ந்த ஆறு உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ஆறு உறுபபினர்களும், முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்களும் முதன் முறையாக நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகியிருந்தனர்.

இவர்களில் பலருக்கு இந்த முறை தேர்தலில் போட்டியிட வாய்ப்புக்கிடைக்குமா என்பது சந்தேகமே. புதிய கூட்டணிகள் உருவாகியிருப்பதால், புதிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடம்கிடைப்பது கடினமே.

இதேவேளை, இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட செயலாளர்களும், இதேவகையான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட செயலாளர்களும் ஐந்து வருடகாலம் பதவி வகித்தாலேயே ஓய்வூதியத்தைப் பெறமுடியும்.

பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த ஓய்வூதியத்தையும், பதவிக்காலத்தில் சம்பளத்தையும் பெற்றுக்கொள்வதற்காகத் தமது தனிப்பட்ட செயலாளர்களாக மனைவி, பிள்ளைகள் அல்லது மிக நெருங்கிய உறவினர்களை நியமிப்பது வழக்கமாகும்.

# சமுர்த்தி வங்கிக்கு புதிய கட்டடம்

மருதங்கேணியில் அமைந்துள்ள சமுர்த்தி வங்கிக்கான புதிய கட்டடம் - 10 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுவருகின்றது. இந்தக் கட்டடம் மருதங்கேணி - தாளையடி வீதியில் உள்ள அரசகாணியில் அமைக்கப்பட்டு வருகிறது.

இதுவரை காலமும் மருதங்கேணி சமுர்த்தி வங்கி, தனியார் கட்டடத்தில் இயங்கிவருகிறது. யாழ்.மாவட்டத்தின் முதலாவது சமுர்த்தி வங்கி இதுவாகும். (17)

கனடாவிலிருந்து துரைசிங்கம்





# சாத்தியமா? சந்திரிகாவின்...!

சர்வ அதிகாரங்களையும் உள்ளடக்கிய ஓர் ஜனாதிபதி ஆட்சியமைப்பை உருவாக்கி, அதைக் கட்டி ஆண்ட பெருமை ஜே.ஆர். ஜயவர்த்தனவையே சாரும். ஒவ்வொரு வார்த்தைப் பிரயோகமும்கூட பல தடவை பரிசீலிக்கப்பட்டு, எந்தக் காரணத்தைக்கொண்டும் ஒரு ஜனாதிபதியாக தான் எடுக்கப்போகும் விபரீத முடிவுகளையோ, இனத்துவேச நிலைப்பாடுகளையோ, சர்வாதிகார செயற்பாடுகளையோ தட்டிக்கேட்கும் உரிமை நீதிமன்றம் உட்பட யாரிடமும் இருந்துவிடக்கூடாது என்பதில் அதீத அக்கறைகாட்டி, கடுமையான சட்டவிதிகளை உள்ளடக்கி அமைக்கப்பட்டதே சர்வவல்லமை பொருந்திய ஜனாதிபதி ஆட்சிமுறை.

இந்த அதிகார பலத்தை வைத்துக்கொண்டே, இனக்கலவரங்களை நாடளாவியரீதியில் முடுக்கிவிட்டமை உட்பட, பிரதமர் சிறீமாவின் குடியுரிமையைப் பறித்தமை, அமைச்சர்களை தான் நினைத்தபடி இசைவாக்கம் செய்தமை, தமிழர் பரம்பரையை அழித்தமை, தமிழர் சொத்துக்களையும், கல்வியையும் நிர்மூலமாக்கியமை, தமிழ்க் கட்சிகளை சிதைத்தமை, தமிழ் - முஸ்லிம் கலவரங்களைக் கட்டவிழ்த்து விட்டமை, ஜே.வி.பி. போன்ற உரிமைகோரும் அமைப்புக்களை வேரோடு துண்டாடியமை, பௌத்த மதத்தையும் சிங்கள மொழியையும் அரச கருமங்களில் கனமாகத் திணித்தமை, வடக்கு - கிழக்கில் கடுமையான தணிக்கைக்குக்கீழே உலகிற்குத் தெரியாத இன அழிப்பைத் தொடர்ந்தமை, ஊடகங்களை ஊமையாக்கியமை, மலையக மக்களை இருட்டடிப்புச் செய்தமை, இந்திய வல்லரசையே தன்வசம் ஆதரவுக்கரம் நீட்ட ஆணையிட்டமை, ஜயவர்த்தனபுரமெனும் அந்தப்புரத்தை அமைத்தமை - இன்னும் இன்னோரன்ன அனைத்தையும் தான்தோன்றித்தனமாக நிறைவேற்ற இந்த சர்வவல்லமை பொருந்திய அதிகாரப்பீடமே ஜே.ஆருக்குத் துணை போனது.

**ஆசை யாரை விட்டது?**

எதிர்க்கட்சியில் இருந்தவர்கள் என்னதான் இந்த அதிகார ஜனாதிபதி ஆசனத்தை எதிர்த்துக் குரல் கொடுத்தாலும், 'தனக்கு தனக்கு என்றால் சுழகு படக்கு படக்கு' என்று அடித்துக்கொள்வதுபோல, தனது கட்சியும் இதே சர்வவல்லமையுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, சிலகாலம் கோலோட்சினாலென்ன என்ற பேராசை மட்டும், எந்தக் கட்சியின் தலைமையையும் வசப்படுத்தாமலில்லை. இதற்கு சந்திரிகா என்ற பரம்பரை அரசியல்வாதியும் விதிவிலக்காய் இருந்துவிடவில்லை.

1994 இல் கடுமையான அரசியல் பிரசாரத்தின்போது, முன்னிலைப்படுத்திய இரண்டு பீரங்கிப் பிரசார அறிவிப்புக்களில் முதன்மையானது - தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையுடன் நேரடியாகப் பேசி, இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவது என்பது. அவரது இரண்டாவது அறிவிப்பு - சர்வவல்லமை பொருந்திய ஜனாதிபதி ஆட்சியை, தான் ஆட்சிபீடமேறிய 6 மாதங்களுக்குள் நீக்கிவிடுவதென்பது. ஆனால், இந்த வருடம் தனது 10 ஆவது வருடத்தை ஜனாதிபதி ஆசனத்தில் இருக்கும் சந்திரிகா, இதுவரை அது குறித்து எதுவித நடவடிக்கையும் எடுக்க முன்வரவில்லை.

இதைவிட, இன்னும் பல சுவையான கவர்ச்சியான அரசியல் அறிவிப்புக்கள் பல சந்திரிகாவினால் முன்மொழியப்பட்டன. மக்கள் இந்தப் பெண்மணியின் கவர்ச்சிகர பிரசாரங்களில் கொஞ்சம் பழையதெல்லாம் மறந்தனர். எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க என்ற இவருடைய தந்தை படைத்த சிங்கள - பௌத்த இனவாத அறிவிப்புக்களையும், நடைமுறைப்படுத்த அவர் கொண்ட வியூகங்களையும், அதனால் நிரந்தரமாக தமிழ் இனம் அடிமைப்படுத்தப்பட வழி பிறந்ததையும் அப்போதென்னவோ சந்திரிகாவின் சேலைத்தலைப்பு மக்களின் கண்களை மறைத்துவிட்டது.

தமிழ் மக்களின் பெரும்பான்மைப் பலத்துடன்தான் சந்திரிகா முதலில் ஆட்சிப்பீடமேறினார் என்பதை அவரிடம் இப்போது சொன்னால், அதை மறுப்பதற்கும், அப்படிச் சொன்னவரை அப்படியே அழித்துவிடுவதற்கும்கூட சந்திரிகா இப்போது பின்நிற்கமாட்டார். ஆனால், அதுதான் உண்மை. சமாதானத்தை தமது மூச்சுக்காற்றாய் சுவாசிக்க ஆசைப்பட்டு அடக்கி ஒடுக்கப்பட்ட தமிழினம், சந்திரிகா விரித்த வலையில் தற்செயலாய் விழுந்ததால் வந்த வினைதான், அதன்பின் நிகழ்ந்தது அத்தனையும் வேதனைதரும் நிகழ்வுகள் என்பதைத் தமிழினம் மறந்துவிடக் கூடாது. அரசியல் இலாபம் தேட அவ்வப்போது பாம்புத்தோலைப் போர்த்துக்கொள்ளும் அற்ப ஆசையுள்ள தமிழ் அரசியல்வாதிகளும் இந்த நாடகங்களையெல்லாம் மறந்து விடக்கூடாது என்பது மிகவும் முக்கியமானது.

> **தமிழ் மக்களின் பெரும்பான்மைப் பலத்துடன்தான் சந்திரிகா முதலில் ஆட்சிப்பீடமேறினார் என்பதை அவரிடம் இப்போது சொன்னால், அதை மறுப்பதற்கும், அப்படிச் சொன்னவரை அப்படியே அழித்துவிடுவதற்கும் கூட சந்திரிகா இப்போது பின்நிற்க மாட்டார். ஆனால், அதுதான் உண்மை. சமாதானத்தை தமது மூச்சுக் காற்றாய் சுவாசிக்க ஆசைப்பட்டு அடக்கி ஒடுக்கப்பட்ட தமிழினம், சந்திரிகா விரித்தவலையில் தற்செயலாய் விழுந்ததால் வந்த வினைதான். அதன்பின் நிகழ்ந்த அத்தனையும் வேதனை தரும் நிகழ்வுகள் என்பதைத் தமிழினம் மறந்துவிடக்கூடாது. அரசியல் இலாபம் தேட அவ்வப்போது பாம்புத்தோலைப் போர்த்துக்கொள்ளும் அற்ப ஆசையுள்ள தமிழ் அரசியல்வாதிகளும் இந்த நாடகங்களையெல்லாம் மறந்துவிடக்கூடாது என்பது மிகவும் முக்கியமானது.**

**சந்திரிகா சமைக்கும் வியூகம்தான் என்ன?**

2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற இரண்டாவது ஜனாதிபதித் தேர்தலில், மீண்டும் பலமான உறுதிமொழிகளை வழங்கி, ஜனாதிபதி என்ற தனது ஆசனத்தைத் தக்க வைத்துக்கொண்ட சந்திரிகாவுக்கு, அப்போதே தனது பதவிக்காலத்தின் ஆயுள் இன்னும் ஆறே வருடம்தான் என்ற வருத்தமும் தொற்றிக்கொண்டது. சர்வவல்லமைகளையும், அதிகாரங்களையும் இந்தக் கதிரைக்கு வழங்கிய ஜே.ஆர்.ஜயவர்த்தன, காலத்தை நீடித்து மூன்றுமுறை ஜனாதிபதியாக ஒருவரே வருவதை ஏற்றுக்கொள்ளும் ஒரு சரத்தை இணைக்க மறந்து போனார். அதற்கு அவரது வயதும் ஒரு காரணமாக இருந்தது. தனது ஜனாதிபதிக் காலத்தை, தான் ஓய்வுபெறுமுன் தொடர்ந்து 12 வருடங்களுக்கு அனுபவித்தால் போதும் என்றநிலை இருந்ததால், அதற்குப் பின் தொடரும் ஒரு வசதியை அப்போது அவர் அங்கே இணைத்துக்கொள்ளவில்லை. அப்படி அவர் இணைத்துக் கொண்டிருந்தால், இப்போது சந்திரிகா அவசரப்பட்டு நாடாளுமன்றத்தைக் கலைத்திருக்கும் தேவையும் இருந்திருக்காது. அப்படியென்றால், இப்போது ஓரளவிற்கு உங்களுக்குப் புரிந்திருக்கும், சந்திரிகா எதை நோக்கிக் காய் நகர்த்துகிறார் என்பது.

2006 ஆம் ஆண்டில் முற்றுப்பெறும் அவரது இரண்டாவது ஜனாதிபதிக் காலத்திற்குப் பின்னர், அரசியலிலிருந்து ஓய்வு பெறும் எண்ணம் சந்திரிகாவுக்கு முற்றிலும் இல்லை. வயதுபோன ஜே.ஆர். ஓய்வு பெற்றிருக்கலாம், ஆனால் ஆட்சியிலிருந்து அனைத்தையும் அனுபவிக்கும் சந்திரிகாவுக்கு, அதைவிட்டுவிட விருப்பம் எதுவும் இருக்கப்போவதில்லை. அதனால், தனது அதிகாரத்தைப் பாவித்து, எத்தனை தேர்தல்களை நடாத்தியும், எத்தகைய விபரீதக் கூட்டணிகளை அமைத்தும் தனது கட்சியையே வெற்றி பெறவைக்கவேண்டிய தேவை சந்திரிகாவுக்கு இருக்கிறது.

**என்ன காரணம்?**

தனது கட்சியே தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்றம் நுழைந்தால், உடனடியாகவே தான் உறுதியளித்தபடி ஜனாதிபதி முறையை ஒழிக்கிறேன் பார் என்று மக்களை ஏமாற்றி, தான் பிரதம மந்திரியாகப் பதவியேற்று, ஜனாதிபதி முறையை அகற்றி, ஜனாதிபதிக்கு உரித்தான பல உரிமைகளையும் வல்லமைகளையும் மீண்டும் பிரதம மந்திரிக்கே வழங்கி, தான் ஓர் வல்லமை பொருந்திய பிரதம மந்திரியாக ஆட்சியைத் தொடரலாம். இதன்மூலம், 2006 இற்குப் பின்னர் அரசியலில் இருக்க முடியாது என்றநிலைமை மாறி, சந்திரிகா தொடர்ந்தும் பிரதம மந்திரியாக எத்தனை காலத்திற்கும் வலம்வர வாய்ப்பு உருவாகி விடும்.

**தேர்தலில் தோல்வியுற்றால் என்ன நிலைமை?**

தேர்தலில் அறுதிப் பெரும்பான்மைப் பலத்துடன் வெற்றிபெற்று தன்னால் நாடாளுமன்றம் வரமுடியாது என்பது சந்திரிகாவுக்கும் தெரியும். இருந்தாலும், ஐக்கிய தேசிய முன்னணியும் அறுதிப் பெரும்பான்மைப் பலத்தைப் பெறாது என்பதை அனுமானித்துள்ள சந்திரிகாவிடம், தனது பொய் வாக்குறுதிகளை வாரி வழங்கி, பௌத்த - சிங்கள இனத்துவேசத்தை சிங்களக் கிராமங்கள் தோறும் வீசிவாரி, எப்படியும் சிறிய கட்சிகளை வளைத்துப் போட்டுவிடலாம் என்ற ஊகம் மட்டும் இருக்கிறது. அப்படியும் தேர்தலில் நாடாளுமன்றப் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கமுடியாது போகிறது என்று வைத்துக்கொள்வோம்.

அப்போது மீண்டும் அவருக்குக் கைகொடுக்க, ஜனாதிபதி பதவியின் சர்வவல்லமை அதிகாரங்கள் கைவசம் இருக்கின்றன. போதிய பலமற்ற ஐக்கிய தேசிய முன்னணியிடம் நாடாளுமன்றத்தைக் கையளிக்கும்நிலை இல்லாமையால், நாட்டின் பாதுகாப்பையும் இறைமையையும் கருதி, நாட்டின் நலனுக்காக இடைக்கால ஜனாதிபதி ஆட்சிமுறையை அறிவிப்பதாக சந்திரிகா மீண்டும் ஒரு குட்டி மாயாஜால அரசியல் அறிவிப்பு விடுக்கலாம். இதன் மூலம், தற்காலிகமாகத் தனது ஆட்சியைத் தொடர்வதோடு, தான் ஏற்கனவே அறிவித்த உறுதிமொழியின்படி, ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் வியூகத்தையும் முன்மொழியலாம்.

இதனது அடுத்த கட்டமாக, ஜனாதிபதி ஆட்சியை இல்லாமற்செய்து, தானே புதிய பிரதமர் என்ற மாற்று அறிவிப்பைக்கூடச் செய்யலாம். எல்லாவற்றிற்கும் துணையாகச் சந்திரிகாவிற்குக் கைகொடுக்கப்போவது அவரது சர்வவல்லமையுள்ள ஜனாதிபதியின் அதிகாரங்கள்தான்.

**இது குறித்து சட்டப்பிரச்சினை எழ வாய்ப்புண்டா?**

தற்செயலாக இது குறித்து சட்டப் பிரச்சினைகள் எழுப்பப்படும் பட்சத்தில், மீண்டும் ஜே.ஆர். பயன்படுத்திய ஒரு ஆயுதம் சந்திரிகாவிடம் கைவசம் இருக்கிறது. என்னவென நீங்களும் அறிய ஆவலாய் இருப்பீர்கள். அதுதான் அபிப்பிராய வாக்கெடுப்பு என்றழைக்கப்படும் 'ஆம் அல்லது இல்லை' என்று மக்களை விடைகூற அழைக்கும் 'மக்கள் ஆய்வு'. 'ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாது ஒழிக்கும் நோக்கில், ஜனாதிபதி சந்திரிகா-பிரதமர் சந்திரிகாவாகப் பதவி மாறுவதையும், அதன்பின்னர் ஜனாதிபதி பதவியை இல்லாமற் செய்வதற்கும் நீங்கள் விருப்பம் தெரிவிக்கிறீர்களா' என்ற கேள்வியை மட்டும் முன்வைத்து, ஆம் அல்லது இல்லை என்று மக்களைப் பதில்கூறப் பணித்தால்-பலத்த பெரும்பான்மையுடன் சந்திரிகா பிரதமராகி விடலாம். இந்தமுறைமூலம் ஏற்கனவே பதவியை நீடிப்பதில் வெற்றி கண்டவர் ஜே.ஆர்.ஜயவர்த்தன என்பதை நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள்.

**முடிவுதான் என்ன?**

ஆக, எப்படிப் பார்த்தாலும், சந்திரிகாவின்கீழ் நாடாளுமன்றம் வந்தாலன்றி, பிறிதொரு நபரின்கீழ் உருவாகப்போகின்ற நாடாளுமன்றத்தை ஜனாதிபதி சந்திரிகா எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப்போவதில்லை. அப்படி அனுமதிப்பது, மீண்டும் 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற கதையாக, சந்திரிகா என்ற ஜனாதிபதியையும், ரணில் என்ற மாற்றுக்கட்சிப் பிரதமரையும் உள்ளடக்கிய, அதேபழைய திரிசங்குநிலைக்கு இட்டுச்செல்லும். இந்த முடிவை அடைவதற்காக, இத்தனை பெரிய நாடகங்கள் தயாரித்து, நாட்கணக்காய் நடத்துகிறார் சந்திரிகா? இல்லவே இல்லை.

அதனால், இலங்கை என்ற நாட்டில், இனி உருவாகும் நாடாளுமன்றத்தில் அதிகார ஆசனத்தில் சந்திரிகா அமரும்வரை, அமைதிக்குப் பஞ்சம்தான்! தனது சிம்மாசனத்தை உறுதிசெய்யமுயலும் சந்திரிகா, சமாதானம் மலர்வதை விரும்பாத கூட்டணிக் கட்சியுடன் கைகோர்த்திருப்பதே தமிழர்களின் மிகமோசமான சாபக்கேடாக அமைந்துவிட்டது!!

தமிழர்களுக்கு இனிமேல் துடுப்பாக இருக்கப்போவது 'சர்வதேச ஆதரவு மட்டுமே'. இருந்தாலும், கடந்தகால அனுபவத்தில், சர்வதேச அழுத்தங்கள் நிரந்தரமானவையல்ல என்பதை அவதானித்திருக்கிறோம். ஆனானப்பட்ட ஐ.நா.வின் அழுத்தத்தையே கண்டுகொள்ளவில்லை அமெரிக்கா என்று பார்க்கும்போது, ஆசியாவின் சுட்டுவிரலைவிடச் சிறிய இலங்கை எம்மாத்திரம்?!

# மிலிந்தவின் இராஜினாமாவை ஜனாதிபதி சந்திரிகா ஏற்றார்


(கொழும்பு)

பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞானத் தொழில்நுட்பத்துறை அமைச்சராக இருந்த மிலிந்த மொறகொடவின் இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஏற்றுக்கொண்டார்.

கடந்த 13 ஆம் திகதி தலைப்பிடப்பட்டு, மிலிந்த மொறகொடவுக்கு ஜனாதிபதி அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், அமைச்சரவையில் அவர் அங்கம் வகித்தபோது ஆற்றிய சேவைக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மிலிந்த மொறகொட வகித்த அனைத்துப் பொறுப்புக்களுக்கும் நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி உடனடியாக அமுலுக்குவரும் வகையில் நியமிக்கப்பட்டார்.

## முட்டை உடைத்து சாதனை!



கர்நாடக மாநிலம் பெங்களூரைச் சேர்ந்தவர் ராகவேந்திரா. 10 ஆம் வகுப்புப் படிக்கும் இவர் பின் மணிக்கட்டு மூலம் 30 வினாடிகளில் 13 முட்டைகளை உடைத்து கின்னஸ் சாதனை படைத்தார். இதற்குமுன்பு நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த லிசா பாட்டர்சன் என்பவர் 30 வினாடிகளில் 5 முட்டைகளை உடைத்தது தான் சாதனையாக இதுவரைக்கும் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜப்பானின் இரண்டாவது இடத்திலும் பறவைக்காய்ச்சல் நோய் பரவியது!



ஜப்பானில் பறவைக்காய்ச்சல் நோய் இரண்டாவது இடத்திலும் பரவியுள்ளது.

ஜப்பானின் தீவொன்றில் அமைந்துள்ள கோழிப்பண்ணையொன்றில் இந்த நோயினால் பல கோழிகள் இறந்துள்ளன.

முன்னர் இந்த நோய் ஜப்பானின் தென் பகுதியில் அமைந்துள்ள கொன்சு தீவில் கோழிகளுக்குப் பரவியிருந்தது. இதனிடையே, பறவைக்காய்ச்சல் தொடர்பாக புதிய தகவல் தெரிவிக்கப்படாவிட்டால், இந்தநோய் முற்றாகத் தடுக்கப்பட்டுள்ளது என நாளை அறிவிக்க ஜப்பான் அரசு திட்டமிட்டிருந்தது.

புதிதாக பறவைக் காய்ச்சல் நோய் அறிவிக்கப்பட்டபின் விசாரணைகள் மேற்கொள்வதற்கு ஜப்பான் அரசு தீர்மானித்துள்ளது.

இதனிடையே, இந்தமாத முடிவில் தாய்லாந்தில் பறவைக்காய்ச்சல் முற்றாகத் தடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்க அதிகாரிகள் திட்டமிட்டிருந்தனர். ஆனால், பறவைக்காய்ச்சல் தொடர்ந்தும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 10 மில்லியன்களுக்கு மேற்பட்ட கோழி, வாத்து ஆகியன - சீனா, தென் கொரியா, கம்போடியா, தாய்வான், இந்தோனேசியா, பாகிஸ்தான், லாபோஷ் ஜப்பான் ஆகிய நாடுகளில் கொல்லப்பட்டுள்ளன.

## சவுதியில் இறுதித்தாக்குதல் நடத்த முஸ்லிம் தீவிரவாதிகள் திட்டமாம்!

### பிரிட்டன் வெளியுறவு அமைச்சு தெரிவிப்பு

சவுதியில் இறுதித்தாக்குதல் ஒன்றை மேற்கொள்வதற்கு முஸ்லிம் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக பிரித்தானியாவின் வெளிநாட்டு அலுவலகம் தெரிவித்துள்ளது.

தாக்குதல் ஒன்று நடைபெறுவதற்கு சாத்தியங்கள் அதிகரித்துள்ளதாக அது- உல்லாசப் பிரயாணிகளுக்கு எச்சரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை சவுதியின் தலைநகரான ரியாட்டிற்கான விமானப்பயணம், பாதுகாப்பு நோக்கங்களுக்காக நிறுத்தப்பட்ட பின்னர் இந்த எச்சரிக்கையை அறிவித்துள்ளது.

சவுதியில் உள்ள பிரித்தானிய பிரஜைகள் செறிந்துவாழும் கட்டிடத் தொதிகள், பொது இடங்கள், விடுதிகள், உணவகங்கள் ஆகியவற்றிலிருந்து விலகியிருக்குமாறு பிரித்தானிய அரசு கேட்டுள்ளது.

சென்ற மே மாதம் ரியாட்டில் அமைந்துள்ள மேற்கு நாடுகளின் தூதரகங்கள் மீது ஒரே நேரத்தில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களில் 34 பேர்வரை கொல்லப்பட்டிருந்தனர். கொல்லப்பட்டவர்களில் இருவர் பிரித்தானிய பிரஜைகளாவர்.

## உகண்டா எதிர்க்கட்சிகளால் கூட்டமைப்பு உருவாக்கம்!



உகண்டாவில் எதிர்க்கட்சிகள் பல இணைந்து கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளன. இந்தக் கட்சிகள் ஒன்றிணைந்து 2006 ஆம் ஆண்டு நடத்தப்படவுள்ள தேர்தலில் தற்போது ஆட்சியிலுள்ள ஜனாதிபதி ஜொவேரி முசீவினியைப் பதவியிலிருந்து நீக்குவதற்குத் திட்டமிட்டுள்ளன.

ஜனாதிபதி ஜொவேரி முசீவினி 1986 ஆம் ஆண்டிலிருந்து பதவிவகித்துவருகின்றார். இவர் எதிர்க்கட்சிகளை மிகுந்த அழுத்தத்திற்கு உட்படுத்திக் கட்டுப்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2006 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தலில் இவரது ஆளுங்கட்சியும் போட்டியிடுவதற்குத் தீர்மானித்துள்ளது.

# கெயிற்றியின் மத்திய பிரதேச கிண்சியில் போராளிகள் தாக்குதலை ஆரம்பித்தனர்



கெயிற்றியின் மத்திய பிரதேசத்தில் அமைநதுள்ள நகரான கிண்சியில் புதிய தாக்குதல் ஒன்றை அந்த நாட்டின் போராளிக்குழுக்கள் மேற்கொண்டுள்ளன.

மேலும் போராளிக்குழுக்கள் தமது ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பிரதேசங்களின் எண்ணிக்கையை அதிகரித்துவருகின்றனர் நகரில் அமைந்துள்ள பொலிஸ் நிலையம் ஒன்றை அவர்கள் தாக்கியுள்ளனர். மாவட்டத் தலைவர் ஜோனாஷ் மக்கிமி உட்பட மூவரைக் கொனறுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கிய பல நகரங்களை போராளிகள் கைப்பற்றியிருக்கலாம் என பி.பி.சி யின் கிளெயர் மர்சால் தெரிவித்தார். இதனிடையே கெயிற்றியின் எல்லையில் அமைந்துள்ள டொமினிக்கன் குடியரசு தனது எல்லையூடான போக்குவரத்துக்களை நிறுத்தியுள்ளது.

எதிர்ககட்சி அரசியல்வாதிகளும், போராளிக் குழுக்களும் ஜனாதிபதி அரிஷ்டைப் பதவி விலகவேண்டும் என அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

ஆனால், நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகுவது தொடர்பாக எதுவிதமான கருத்துக்களையும் அரிஷ்டைப் தெரிவிக்கவில்லை.

மேலும் சமாதானமான வழிமுறைகளில் தீர்வுஒன்றைக் காண்பதற்குத் தான் முயற்சிகளை மேற்கொண்டுவருவதாகவும், போராளிக் குழுவொன்று நாட்டின் ஜனநாயகத்தைச் சீகுலைகக முற்படுவதாகவும், சட்டத்தையும் பேச்சுவார்த்தையையும் இணைத்து பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவேண்டும் எனவும் ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்தார்.

பொலிஸார் தனித்துப்போராடி எதிரிகளை வெல்லமுடியாதிருப்பதால், சர்வதேச சமூகம் உதவவேண்டும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித் திருக்கிறார்.

இதனிடையே போராளிக் குழுக்கள் - செஞ்சிலுவைச் சங்கத்தின் தொடர் அணி ஒன்றை பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அழைத்துச் சென்றுள்ளது. இரத்தம், சத்திரசிகிச்சை உபகரணங்கள் உட்பட பல நிவாரணப் பொருட்களுடன் செஞ்சிலுவைச் சங்கத்தின் குழு போராளிக குழுக்கள் வசமுள்ள பிரதேசங்களுக்குச் செனறுள்ளது.

கெயிற்றியின் பொலிஸ் படையில் 5000 பொலிஸார் கடமையாற்றுகின்றனர். ஆனால், போராளிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாகக் காணப்பட்ட நிலையிலும் 11 நகரங்களை ஆக்கிரமித்துள்ளனர். நாடு கடத்தப்பட்ட குழுத்தலைவர்கள், போராளிகளுடன் இணைந்து ஜனாதிபதி அரிஷ்டைப் பதவியிலிருந்து விலக்குவதற்காகப் போராடிவருகின்றனர்.

பெப்ரவரி மாதம் மீண்டும் ஆரம்பித்த தாக்குதல்களில் இதுவரை 50 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

## 800 ஆண்டுகள் பழமைவாய்ந்த

# ஜெருசலேம் புனித பிரதேசத்தின் நுழைவாயில் சுவர் இடிந்து வீழ்ந்தது

ஜெருசலத்தில் முஸ்லிம்கள், யூதர்கள் ஆகியோரின் புனிதப்பிரதேசத்தின் நுழைவாயிலின் படிக்கட்டுக்களைத் தாங்கிநிற்கும் சுவர் சென்றவாரம் இடிந்து வீழ்ந்துள்ளது. இதனால் நுழைவாயிலின் படிக்கட்டுக்களும் உடைந்து விழும் நிலை ஏற்பட்டுள்ளதாக இஸ்ரேலின் புதைபொருள் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.


இந்தச்சுவர் 800 ஆண்டு பழமைவாய்ந்ததாகும்.

சிறிதுகாலத்தில் மிகுதிப்பகுதிகளும் உடைந்துவிழும் அபாயம் தோன்றியுள்ளதாக, கிபுறு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இயிலாட் மசார் தெரிவித்தார்.

இஸ்லாமியத் தீவிரவாதிகள் சுவர் உடைந்து விழுவதற்கு இஸ்ரேல் காரணமெனத் தெரிவித்திருக்கின்றனர்.

அண்மைய ஆண்டுகளில் சுவரில் பல வெடிப்புகள் தோன்றியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இதனிடையே சென்றவாரம் நடைபெற்ற சிறிய பூமியதிர்ச்சியும், தொடர்ந்து பனிக்கட்டிகள் விழுந்துகொண்டிருந்தமையுமே சுவர் விழுந்தமைக்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் புனிதப் பிரதேசத்திற்கு அருகில் அல் அகுசா பள்ளிவாசல் அமைந்துள்ளது. இஸ்ரேல் அந்தப்பள்ளிவாசல் அமைந்துள்ள பிரதேசத்தில் கண்ணிவெடிகளைப் புதைத்து வருவதாகவும், இவற்றில் புனிதப் பிரதேசத்



தின் வாயில் அமைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இஸ்ரேல் இந்தக் கருத்துக்கு மறுப்புத் தெரிவித்திருக்கிறது.

## சிறுவனுக்கும் நாய்க்குட்டிக்கும் இந்தியாவில் திருமணம்!

(ஜாம்ஜெட்பூர்)

5 எயது சமீா என்ற சிறுவன் ஒருவன் நாயக்குட்டியைத் திருமணம் செய்துகொண்டான்.

இந்தியாவின் ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள ஒருமலைக்கிராமத்தில் இந்த அதிசய திருமணம் நடைபெற்றது. இந்த கிராமத்துப் பெண் பூசாரி, திருமணச் சடங்குகளை முன் நின்று நடத்தினார்.

மேளவாத்தியங்கள் முழங்க நடைபெற்ற, இந்த விழாவுக்கு வந்த விருந்தாளிகளுக்கு, விருந்தாக 'பியா' வழங்கப்பட்டது.

இந்த திருமணம் குறித்து 5 வயது சிறுவனின் தந்தை மூடியா கூறும்போது -

"இது போன்ற திருமணம் செய்வதால், தீயசக்திகள் எங்கள் குடும்பத்தையும், எங்களது சமுதாயத்தையும் ஒட்டாமல் ஓடிச்செல்லும்" என்றார்.

கழுதைக்கு தாலி கட்டினால் மழைவரும் என்பதுபோல், நாய்க்கு தாலி கட்டினால் தீய சக்தி ஒட்டாது என்றொரு நம்பிக்கை.

# பாக்தாத்தில் நடந்த தாக்குதலில் 3 அமெரிக்கப் படையினர் பலி!

ஈராக்கின் தலைநகர் பாக்தாத் வடபகுதியில் சனி முஸ்லீம்கள் வாழும் பிரதேசத்தில் நடைபெற்ற தாக்குதல்களில் மூன்று அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டும் 6 பேர் வரை காயமடைந்துமுள்ளனர். காயமடைந்தவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை அமெரிக்க படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் 541 படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

மே மாதம் முதலாம் திகதி ஈராக்கின் மீதான ஆக்கிரமிப்பு முடிந்துவிட்டதாக அமெரிக்கா அறிவித்தபின்னர் காயப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

போரில் பாதிக்கப்பட்டவர்களின் தொகை அதிகரிப்பினால், யூலை முதலாம் திகதி ஈராக்கிய மக்களிடையே ஆளும் அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் கூட்டுப் படையினரிடையே உருவாகியது. எவ்வாறான அரசு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்பதில் அமெரிக்க அதிகாரிகளிடம் குழப்பம் காணப்படுகிறது.

இதனிடையே இஸ்லாமியச் சட்டங்கள் - இடைக்கால அரசியல் அமைப்பின் அடிப்படையாக அமைதல்வேண்டுமென ஈராக்கியர்களால் வற்புறுத்தப்பட்டிருந்தது. நேற்றுமுன்தினம் இது தொடர்பாக கருத்துத்தெரிவித்த ஈராக்கின் அமெரிக்க நிர்வாகியான போல் பிறமர் - இஸ்லாமியச் சட்டங்கள் அரசியல் யாப்பின் அடிப்படையாக அமைவதற்கான முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவிக்கப்போவதில்லை எனத் தெரிவித்திருந்தார்.

நமது ஈழநாடு

The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

# பேச்சுவார்த்தைகள் மூலம்...

யாழ்ப்பாணத்தின் கல்வித்தரம் தென்கிழக்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மெச்சத்தக்க வகையில் அமைந்துள்ளது.

எனினும் ஆங்கிலம் கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கான கற்பித்தல் திறன்வாய்ந்த ஆசிரியர்கள் இங்கு பற்றாக்குறையாக இருக்கிறது. இது குறித்து நான் சில கலந்துரையாடல்களை நடத்தியுள்ளேன்.

இலங்கைக்கும், இந்தியாவிற்கும் இடையிலான உறவு மிகநீண்டகால வரலாறுகொண்டது. பொதுவாக இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உடன்பாடுகள் மிகவும் உறுதியான வையாகவுள்ளன.

இலங்கையில் சமாதானப் பேச்சின் மூலம் சமாதானம் உருவாவதையே இந்தியா எப்போதும் ஆதரிக்கும். போரையோ அதனால் உண்டாகக்கூடிய அழிவையோ நாம் விரும்பவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அவர் நேற்று யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் சென்று நிலைமைகளை அவதானித்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ப)

## 4 கட்சிகள்...

கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக தேசிய அபிவிருத்தி முன்னணி, சிங்கள மக்கள் கட்சி ஆகியன வேட்பு மனுவினை தாக்கல் செய்தன.

இதேவேளை - மட்டக்களப்பு மாவட்டத்தில் சுயேட்சை குழுவொன்று நேற்று வேட்பு மனுவைத் தாக்கல்செய்தது.

பொதுத்தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை மாவட்டச் செயலகங்களில் ஏற்றுக்கொள்ளப்படும். இதற்காக மாவட்ட செயலகங்களை அண்டிய பிரதேசங்களில் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

## சிவராத்திரி

வண்ணை ஸ்ரீவிஸ்வலிங்க மகா கணபதி கோவில் மகாசிவராத்திரி இன்று மாலை 6 மணிக்கு உருத்திரா அபிஷேசத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று சாமப் பூசைகள் இடம்பெறும்.

## ஐக்கிய மக்கள் சுதந்திர...

ணியின் தலைவி பேரியல் அஷ்ரப்பும், மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்தனவும் நியமிக்கப்பட்டனர். மேலும் முன்னணியின் முதலாவது கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி அனுராதபுரம் சிறி மகா போதில் நடைபெறும் என்று முன்னணியின் செயலர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பாக மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் டி.எம். ஜயரத்ன, மைத்திரிபால சிறிசேன மற்றும் நந்தன குணதிலக, விஜித ஹேரத், விமல்வீரவன்ச, சுனில் ஹந்திநெற்றி ஆகியோரும் பங்குபற்றினர்.

## புதிய அரசாங்கத்தின்...

வடைந்துள்ள நிலையில் தென்பகுதி மக்கள் மத்தியில் ஒரு வலியை ஏற்படுத்தியுள்ளது.

எதிர்க்கட்சியிலிருந்து சமாதானப் பேச்சுவார்த்தை குழுவில் ஒருபிரதிநிதியை சேர்க்காமல் விட்டதே ரணில் விக்கிரமசிங்கவின் சமாதானப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைவதற்கு காரணமாகும்.

தமிழ்ச் சமூகத்தின் பிரச்சினைகள் தொடர்பில் அனைத்துக் கட்சிகளும் மிகவும் பொறுப்புணர்வுடன் நடந்து வரும்வேளை ஐக்கிய தேசியக்கட்சி அதிகாரத்திற்கு வரும் வெறியில் இந்தச் சமாதான முயற்சியை அரசியல் திட்டமாக முன்வைத்துள்ளது. நோர்வே உட்பட சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ள ஸ்கன்டினேவிய நாடுகளின் பணியையும் மகிந்த ராஜபக்ஷ பாராட்டினார்.

## தமிழ்க்கூட்டமைப்புக்கு...

-துறை துணைப் பொறுப்பாளர் தங்கன், காவல்துறை பொறுப்பாளர் பா.நடேசன், அரசியற் துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி மற்றும் மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர்கள் இளம்பரிதி, எழிலன், அமுதாப், கௌசல்யன், திலக் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சார்பில் இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கல நாதன், விநாயகமூர்த்தி, சிறிகாந்தா, கஜேந்திரகுமார், சுரேஷ் பிரேமச்சந்திரன், பிரசன்னா, சந்திரநேரு, சிவாஜிலிங்கம், சிவசக்தி ஆனந்தன், ரவிராஜ், துரைரட்ணசிங்கம் ராஜாகுகனேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கொள்கை ரீதியாக ஒன்றுபட்டிருக்க...

தும் மக்களது கரிசனைகளை தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளனர். அந்த விடயங்கள் சம்பந்தமாக நாம் இன்று விவாதித்தோம்.

இது மிக ஆக்கபூர்வமானதாகவும் பயனுள்ளதாகவும், எதிர்கால அரசியல் முன்னெடுப்புகளை எவ்வளவு தூரம் உறுதியாக்கிக் கொள்ள முடியும் என்பதிலும் எங்களுக்குள் ஒத்த கருத்துக்கள் நிலவின. இது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

எதிர்வரும் தேர்தலில் என்ன சின்னத்தில கூட்டமைப்பு போட்டியிடும் என்ற கருத்துக்களை நாம் பரிமாறிக்கொண்டோம். இறுதி முடிவை மிகவிரைவில் வெளியிடுவோம். நாம் இணக்கப்பாடு கண்டிருக்கிறோம்.

ஆனால் தமிழ்க்கூட்டமைப்பினர் தனியாகச் சந்தித்து வேறுவிடயங்கள் சம்பந்தமாகவும் ஆராயவிருக்கிறார்கள். ஏனைய பல விடயங்கள் இருககின்றபடியால் அது சம்பந்தமான முடிவுகளை மிகவிரைவில் எதிர்பார்க்கிறோம். இந்தமுறை தமிழ்க் கூட்டமைப்பினரும், நாமும் தேசிய அளவில் எங்களுடைய தலைவரின் எதிர்பார்ப்புக்கேற்ப அனைவரும் கொள்கை ரீதியில் ஒன்றுபட்டு நிற்பதென்றுதான் முடிவு எடுத்துள்ளோம்.

அதில் அனைவரும் எந்தக் கருத்துவேறுபாடும் இன்றி முழு அளவில் மனதார ஒன்றுபட்டிருக்கிறார்கள். கொள்கைக்காக நாம் அனைவரும் எம்மை அர்ப்பணித்திருக்கிறோம் என்பதை மிகத்தெளிவாக உறுதியாக அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் நேரடியாக நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவில்லை. ஆனால் கொள்கை ரீதியாக தமிழ்மக்களுடைய அபிலாசைகளை வெளிப்படுத்துகின்ற ஒரு தேர்தலாக இதை தமிழ் மக்கள் மாற்றியமைக்க விரும்புகிறார்கள்.

அதனால் தமிழ்மக்கள் எந்த தேசியத்துக்காக, எந்தக் கொள்கைக்காக ஒன்றுபட்டு ஒரு தலைமைத்துவத்தின்கீழ் நிற்கின்றார்களோ அதனை இந்த முறை தமிழ் மக்கள் சர்வதேச சமூகத்துக்கு நினைவுறுத்துவதற்கான ஆயத்தங்களோடு இருக்கின்றபடியால் அவர்களின் நிலைப்பாடுகளுக்கு எமது முழு பங்களிப்பும் ஆதரவும் இருக்கும் .

மலையக மக்கள்முன்னணி கூட்டமைப்பினருடன் இணைவது தொடர்பாக இன்று பேசவில்லை. மலையக மக்கள் முன்னணி, மேல் மாகாண முன்னணி ஆகிய கட்சிகளோடு நாம் பேசிய பின்னர்தான் நாம் தமிழ்க்கூட்டமைப்பினருடன் அதுபற்றிக் கலந்துரையாடுவோம்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாக்களிப்பு நடைபெறுவது தொடர்பாக கூட்டமைப்பினருடனும் சம்பந்தனுடனும் பேசியுள்ளோம். எம்மைப் பொறுத்தவரை ஒட்டுமொத்த தமிழ்மக்களும் இந்தமுறை அபிலாசைகளை வெளிப்படுத்தவிருக்கிறார்கள். ஆகவே அதற்கான சாத்தியப்பாடான சூழ்நிலையை ஆராயும்படியே தலைவர் பணித்திருக்கின்றார்.

ஆகவே இது சம்பந்தமாக சம்பந்தனுடன் கதைத்திருக்கின்றோம். அதிலுள்ள சட்டப்பிரச்சினைகள், வாய்ப்புக்கள் சம்பந்தமாக ஆராய்ந்த பின்னர் தெளிவுபடுத்தப்படும்.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் பெரும்பான்மையினக் கட்சிகள் போட்டியிட நாம் தடைவிதித்த தென்பது தவறான செய்தி. பெரும்பான்மைக் கட்சிகள் போட்டியிடக்கூடாதென்றில்லை. போட்டியிடக்கூடாதென்று நிபந்தனை விதிப்பதற்கு நாம் அதிகாரம் எதனையும் பிரயோகிக்கவில்லை.

கூட்டமைப்பு சார்பாக மகேஸ்வரன் போட்டியிடுவதற்கு இடங்கொடுப்பதற்கு நாம் அனைவரும் ஒருமைப்பாட்டோடு இருக்கின்றோம். ஆனால், அவர் தாம் ஒதுங்குவதாகவே அறிவித்துள்ளார்.

புலிகளது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தேர்தல் பிரசாரம் நிச்சயமாக இருக்கும் தமிழ் மக்கள் இந்த முறை ஒன்றுபட்டு தமது அபிலாசைகளை வெளிப்படுத்தவிருக்கிறார்கள் நாம் மாற்றுக்கட்சிகளை வேண்டாம் என்று சொல்லவில்லை. நாம் மாற்றுக்கட்சிகளை வரவேண்டாம் என்றோ, தேர்தலில் போட்டியிட வேண்டாம் என்றோ கூறவில்லை.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்போது அதற்கு பொலிஸாரின் பாதுகாப்பு தொடர்பாக நாம் ஆராய்கிறோம். இது சம்பந்தமாக விரைவில் எமது பதில் வெளிவரும். இப்போது இதற்கான பதிலைக்கூறுவது சாத்தியமில்லை.

வேட்புமனுத்தாக்கல் தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கூடி முடிவெடுத்து அவர்கள் சமர்ப்பிப்பார்கள். கொள்கையளவில் எல்லா விடயங்களிலும் நாம் இணக்கப்பாடு கண்டிருக்கிறோம். மீண்டும் ஒரு தடவை கூட்டமைப்பினருடன் கூடி முடிவெடுக்கவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மலைமகள் இராமநாதன் அவர்கள்

**(பொதுச்செயலாளர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை) காலமாகிவிட்டார்**



**துர்க்காதேவி தேவஸ்தானத்தின் பொதுச் செயலாளர் திருமதி மலைமகள் இராமநாதன் அவர்கள் நேற்று 17.02.2004 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் திரு.கா.இராமநாதன் அவர்களின் மனைவியுமாவார்.**

**இத் துக்ககரமான செய்தியை அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.**

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை.**

**சிவத்தமிழ்ச் செல்வி**
**தங்கம்மா அப்பாக்குட்டி J.P**
**தலைவர்.**

(636)

## திரு.பொன்னையா சண்முகராசா அவர்கள்

**(ஓய்வுபெற்ற தபால் திணைக்கள அலுவலர், G.P.O.COLOMBO)**

அளவெட்டி கேணிக்கரையைப் பிறப்பிடமாகவும், துர்க்காபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.பொன்னையா சண்முகராசா அவர்கள் 17.02.2004 சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் காலம்சென்ற பொன்னையா அன்னம் தம்பதிகளின் அருமை மகனும், காலம்சென்ற அப்பாக்குட்டி தையற்பிள்ளை அவர்களின் அன்பு மருமகனும், பொன்மணியின் அன்புக் கணவனும், உமாசுதன் (திருமகள் அழுத்தகம் சுன்னாகம்), பாமதி (தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம்), ரேவதி (ஆசிரியை யா/கட்டுவன் புலம் மகாவித்தியாலயம்), செந்தூரன் (அம்பாள் தொலைத்தொடர்பு நிலையம்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ஞானேஸ்வரன் (இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்), கணேசலட்சுமி (ஆசிரியை யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), சுகன்யா ஆகியோரின் அன்பு மாமனாரும், கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, செல்வி கனகம்மா அப்பாக்குட்டி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிருந்தா, கபிலன், உமையாள், உமைபாரதி ஆகியோரின் அன்புப் பேரனும், சிவஞானம், செல்வநாயகம், குணரத்தினம், சிவபாலன், காலம் சென்ற மகேந்திரபாலன் அருணகிரிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.02.2004 இன்று புதன்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று கட்டுப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் சென்று தகனம் செய்யப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

**துர்க்காபுரம்,**
**மல்லாகம்.**

**தகவல்**
**மனைவி, பிள்ளைகள்**
**ச.உமாசுதன்.**

(634)

ஹப்பி
ரெக்ஸ் ரைல்
ரெலிக் கொமினிக்கேசன்
பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி
தொலைபேசி எண் : 021 - 2263125-6, 0777 - 745394 தொலைநகல் எண் : 021 - 2263287

எம்மிடம்
☆ டயலொக் G.S.M. கிற் காட்.
☆ டயலொக் G.S.M. சிம்.
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
மொத்த விற்பனையாளர்களுக்கு கொள்வனவிற்கு ஏற்ப விசேட கழிவு வழங்கப்படும்
தொலைபேசி, தொலைநகல், போட்டோ பிரதி, லெமினேற்றிங் சேவைகளும் உண்டு
Dialog GSM kit

HAPPY TEXTILE TELE COMMUNICATION
Dealer for Dialog GSM kit and Sim
MAIN STREET, NELLIADY, KARAVEDDY
T.P No: 021 - 2263125-6, 0777 - 745394 Fax: 021 - 2263287

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.02.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.